# தென் இந்தியா க்ஷேத்ரங்கள்

பி. வி. ஜகதீச அய்யர் இயற்றியது.



ADHYAYA
ATHA IYER LIBRARY
MADRAS

**8**

திருக்கழுக்குன்றம்.

மஹாபலிபுரம்.

*Copyright* *Registered.*

# தமிழ் புத்தகங்கள்.

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| தென் இந்தியா க்ஷேத்திரங்கள்: | | | |
| 1. ஸ்ரீரங்கம் ... | 0 | 10 | 0 |
| 2. சிதம்பரம் ... | 1 | 0 | 0 |
| 3. திருவானைக்காவல், திருச்சினாப்ப | | | |
| ள்ளி, உய்யக்கொண்டான் திருமலை | 0 | 10 | 0 |
| 4. கரூர், நெரூர், கங்கைகொண்ட | | | |
| சோழபுரம், அன்பில் ... | 0 | 10 | 0 |
| 5 & 6. மதுரை ... | 1 | 8 | 0 |
| 7. ராமேசுவரம், உத்தரகோசமங் | | | |
| 8. திருக்கழுக்குன்றம், மஹாபலி | | | |
| புரம் ... | 0 | 12 | 0 |
| கை, திருப்புல்லாணி ... | 0 | 10 | 0 |
| திருவானைக்காபுராணம் ... | 2 | 0 | 0 |
| கம்பராமாயணம்: சுந்தரகாண்டம் ... | 1 | 8 | 0 |
| ஸ்ரீ சங்கரபகவத்பாதர் சரித்திரம் ... | 1 | 0 | 0 |
| ஸ்ரீ சிருங்ககிரி ஜகத்குரு ஸ்ரீ ஸச்சிதான | | | |
| ந்தசிவாபிநவநரஸிம்ஹபாரதீஸ்வாமி | | | |
| கள் திவ்யசரித்திரம் ... | 3 | 0 | 0 |
| ஸ்ரீமத்பகவத்கீதாரஹஸ்யம் பாலகங் | | | |
| காதாதிலகர் இயற்றியது முதற் | | | |
| பாகம் ... | 1 | 4 | 0 |
| பகவத்கீதை வெண்பா ஷட்கம்–1 ... | 0 | 6 | 0 |
| ஷட்கம்–2 ... | 0 | 6 | 0 |
| ஷட்கம்–3 ... | 0 | 6 | 0 |
| தேவீ கீர்த்தனைகள் 1-ம் பாகம் ... | 0 | 3 | 0 |
| ஷெ 2-ம் பாகம் ... | 0 | 2 | 0 |
| ஸத்குருஸ்துதி ... | 0 | 2 | 0 |
| ஹரிஸ்துதி ... | 0 | 2 | 0 |
| ஸுப்ரமண்யஸ்வாமி ஸ்தோத்ரங்கள் | 0 | 5 | 0 |
| முருகன் கீர்த்தனைகள் ... | 0 | 2 | 0 |
| சிருங்கேரி ஸ்வாமிகள் கொடுமுடியில் | | | |
| செய்த உபன்யாஸம் ... | 0 | 2 | 0 |
| ஷெ திருவநந்தபுரத்தில் செய்த | | | |
| உபந்யாஸம் மூன்று பாகங்கள் ... | 0 | 8 | 0 |
| ஸ்ரீராமாயண ஸாரஸங்கிரகம். ... | 0 | 2 | 0 |
| சுண்ணாம்பு, சாந்து, சிமெண்டு, காங் | | | |
| கிரீட் தளவரிசை இவைகளைப்பற் | | | |
| றிய நூல் ... | 0 | 4 | 0 |
| சித்தாதரன் ... | 0 | 2 | 0 |
| காங்கிரஸ் மஹாஸபை ... | 0 | 4 | 0 |
| தேவபோகம் ... | 1 | 0 | 0 |
| நாற்பது லக்ஷம் ரூபாய் ... | 0 | 3 | 0 |
| தாதாவின் தந்திரம் ... | 0 | 2 | 0 |
| ஓர் இரவின் ஸம்பவங்கள் ... | 0 | 6 | 0 |
| ஹேமந்தகுமாரி ... | 0 | 2 | 0 |
| ஹென்றி பெஸ்டலேஸி ... | 0 | 2 | 0 |
| ஹிரண்மயி ... | 0 | 2 | 0 |
| கிருஸ்துபோன்ற ஒழுக்கமுறைநூல் | 1 | 0 | 0 |
| இந்தியாவும் சுய ஆட்சியும் ... | 1 | 8 | 0 |
| இந்திரா ... | 0 | 2 | 0 |

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| கொடியாலம் வாசுதேவ அய்யங்கார் | 0 | 2 | 0 |
| காவடிச்சிந்து ... | 0 | 2 | 0 |
| லஜ்ஜாவதி .. | 0 | 2 | 0 |
| மாலதீ ... | 0 | 3 | 0 |
| பெருமுடிச்சோழன் ... | 0 | 6 | 0 |
| ஸதாசிவேந்திர ஸரஸ்வதி ... | 0 | 2 | 0 |
| அன்பின் வலிமை ... | 0 | 10 | 0 |
| பிருதுலை ... | 0 | 8 | 0 |
| இராதாராணி ... | 0 | 2 | 0 |
| ஸத்குரு கீதை ... | 0 | 8 | 0 |
| வீரமாதேவன் ... | 0 | 4 | 0 |
| வித்யாரண்ய நகரம் ... | 0 | 8 | 0 |
| வியாபாரநீதி ... | 0 | 8 | 0 |
| ஸ்ரீ வாணீ விலாஸினி தனிச்சஞ்சிகை | 0 | 8 | 0 |
| ,, இரட்டைச் சஞ்சிகை 1க்கு | 1 | 0 | 0 |
| ,, 6 நம்பர்கள் அடங்கிய | | | |
| பயிண்டு செய்த வால்யம் | | | |
| ஒன்றுக்கு ... | 3 | 4 | 0 |
| குணசீல ஸ்தலபுராணம் ... | 0 | 8 | 0 |
| ஹநுமான்சிங் ... | 0 | 12 | 0 |
| சர்கா ... | 0 | 8 | 0 |
| சுந்தரி ... | 1 | 0 | 0 |
| திருமுருகாற்றுப்படை ... | 0 | 12 | 0 |
| பத்மினி ... | 0 | 3 | 0 |
| ரகுநாதன் ... | 0 | 12 | 0 |
| குணசீலதிருத்தேர் திருப்பணி | | | |
| அகவல் ... | 0 | 2 | 0 |
| விவேகசந்திரிகை ... | 0 | 8 | 0 |
| வஸந்தஸமுத்ரம் ... | 0 | 12 | 0 |
| ஜினேந்திரன் ... | 1 | 8 | 0 |
| பொன்னுசாமித் தேவர் கொலை ... | 0 | 14 | 0 |
| ஸ்ரீ வாமன சரித்திரம் ... | 0 | 2 | 0 |
| மூன்று வைரங்கள் ... | 0 | 6 | 0 |
| தாக்ஷாயிணி ... | 0 | 6 | 0 |
| கலாசுந்தரி ... | 0 | 12 | 0 |
| மதுசூதனன் .. | 0 | 8 | 0 |
| சிவகுமாரன் ... | 1 | 0 | 0 |
| நற்குலதெய்வம் ... | 0 | 8 | 0 |
| மதனமனோஹரி ... | 0 | 8 | 0 |
| நவநீதரம்பை ... | 1 | 0 | 0 |
| கோமளவல்லி ... | 0 | 8 | 0 |
| காமேந்திரன் ஞானலோசனி ... | 1 | 0 | 0 |
| கஜபதி ... | 3 | 10 | 0 |
| துயராழன்கதை ... | 0 | 12 | 0 |
| பூர்ண வல்லிகதை ... | 0 | 6 | 0 |
| கோமளம் காஞ்சியாத்திரை ... | 0 | 8 | 0 |
| சாரசநேத்ரி ... | 0 | 12 | 0 |
| காட்டுராஜன் ... | 0 | 3 | 0 |
| திலோத்தமா ... | 0 | 8 | 0 |
| மாதவி ... | 0 | 10 | 0 |



வீரபத்திரஸ்வாமி, திருக்கழுக்குன்றம்.





திருக்கழுக்குன்றம் மலையும் கிராமமும். ஸர் சார்ல்ஸ் டாட்ஹண்டரால் பிரியத்துடன் கொடுக்கப்பட்ட பழயகாலைய சித்திரத்திலிருந்து எடுத்தபடம்.

# திருக்கழூக்குன்றம்.

இப் புண்ணிய க்ஷேத்திரம் 'பக்ஷிதீர்த்தம்' என்ற பெயரும் வாய்ந்துளது. இது செங்கல்பட்டுக்குத் தென்கிழக்கில் ஒன்பது மைல் தூரத்திலும் ஸமுத்திரக்கரை யோரமாயுள்ள 'மாமல்லபுரம்' என்றும் 'மஹாபலிபுரம்' என்றும் சொல்லப்படும் இடத்திற்கு பத்து மைல் மேற்கேயும் உள்ளது. ஸ்காந்த புராணததில் இந்த க்ஷேத்ரமானது மஹோததி (வங்காளக்குடாக்கடல்) க்கு ஒரு யோஜனை தூரம் (10 மைல்) மேற்கேயுளதென்றும் க்ஷீரநதி (பாலார்) க்கு அரை யோஜனை தூரம் வடக்கே உளதென்றும், இது ஐந்து சதுரயோஜனை விஸ்தீர்ணமென்றும், இதன் நடுவில்தான் வேதகிரீசுவார் மலையிருக்கிறதென்றும் கூறப்பட்டிருக்கிறது.

இம்மலையானது ஈசுவரனுல் தக்ஷிணதிக்குக்கு அனுப்பப்பட்ட கைலாஸ பர்வதத்தின் மூன்று சிகரங்களுள் ஒன்ருதலால் இதற்கு "தக்ஷிண கைலாஸம்" என்று பெயர்.

இது தென் இந்தியாவில் முக்கியமான குன்று. இம்மாதிரிதான் ஸ்ரீகாளஹஸ்தி, ஸ்ரீ சைலம் இவ்விரண்டிடங்களும்.



காமதேனுவாஹன உத்ஸவம்.

இந்த ஸ்தலத்திற்குத் திருக்கழுக்குன்ற மென்ற பெயர் வந்ததற்குக் காரணம் இரண்டு கழுகுகள் இங்குள்ள கடவுளைப் பூஜித்துவருவதாக ஏற்பட்டுள்ள ஐதிஹ்யமே. இவ்விரண்டு கழுகுகளும் வெளுப்பாகவும் மூக்கில் சற்று மஞ்சள் நிறமுடையவைகளாக

வும் காணப்படுகின்றன. இவைகளின் யௌவனவனப்பும் கம்பீரத் தோற்றமும், அமைதியும் இவைகளே இவைகளின் இனத்திலிருந்தும் எளிதில் பிரித்துக் காண்பிக்கின்றன.



அதிகார நந்திவாஹன உத்ஸவம்.

இப்பறவைகள் இப்பொழுதும் மத்தியானம் பன்னிரண்டு மணி சுமாருக்கு இக்குன்றின்மேலுள்ள கோயிலுக்கு வந்து அங்குள்ள பண்டாரம் அளிக்கும் உணவை உண்டு கர்ப்பகிருஹத்தை வலம்வந்து செல்லுகின்றன. வழியில் இவைகள் திருக்கழுக்குன்றைப் போன்ற மஹாதேவமலையென்ற இன்னொரு குன்றில் தங்கிப் போவதாகக் கூறுகின்றனர்.

இந்த மஹாதேவமலை வட ஆற்காடு ஜில்லாவில் குடியாத்தம் என்னும் ஊருக்கு எட்டு மைல் தூரத்தில் இருக்கிறது.



நந்தி தீர்த்தக்குளமும் கிழக்கு கோபுரவாசலும்.

சிலவருஷங்களுக்கு முன் இப்பறவைகள் ஸம்பந்தமாய் ஒரு அத்புத ஸம்பவம் ஏற்பட்டது. அதாவது: 1921ஹு ஜூன்மீ 17உ காலமே ஸுமார் 9மணிக்கு இரண்டு வெள்ளை கழுகுகள் மதுரை ஸ்ரீ மீனாக்ஷியம்மன் கோயிலிலுள்ள பொத்தாமரை குளத்தில் ஸ்நானம் செய்துவிட்டு அதன் படியில் இரண்டுமணி ஸாவகாசம் தங்கியிருந்தன. $10\frac{1}{2}$ மணி ஸுமாருக்கு அவைகளை போடோ பிடித்தார்கள். பிறகு அவைகள் பொத்தாமரையை பிரதக்ஷிணமாகப் பறந்து சென்று விபூதிப் பிள்ளையார் கோயிலுக்கு ஸமீபமா

யுள்ள மண்டபத்தில் சற்று தங்கிவிட்டுப் போய்விட்டன. உடனே மதுரை தேவஸ்தானத்து அதிகாரிகள் அந்தக் கழுகுகள் வழக்கமாய் திருக்கழுக்குன்றத்திற்கு வருகிற கழு



அம்மன் கோயிலும் மலையின் காக்ஷியும்

குகள் என்று அங்குள்ளவர்கள் சொன்னதால் அவைகளின் போடோவை திருக்கழுக்குன்றம் தேவஸ்தான அதிகாரிகளுக்கு அனுப்பி அவைகள் அங்கு வழக்கமாய் வருகிற கழுகுகள் தானாவென்றும் அந்த ஜூன்மீ 17உ யன்று மத்தியானம் வழக்கம்போல் அவை திருக்கழுக்குன்றத்திற்கு வந்தனவாவென்றும் எழுதிக் கேட்டார்கள். அந்தப் படத்தைப் பார்த்ததுமே திருக்கழுக்குன்றம் தேவஸ்தான அதிகாரிகள் அப்பறவைகள் அக்கோயிலுக்கு வழக்கமாய் தினம் வருகின்றவைகள் தாமென்றும், அங்குள்ளவர்கள் எல்லோரும்

அப்படத்தை எளிதில் அடையாளம் கண்டுபிடித்து விட்டார்களென்றும், அந்த 17உயன்றும் அவைகள் மத்தியானம் அங்கு வந்திருந்தனவென்றும் தெரிவித்தார்கள்.



கோபிலக்குன்றிருக்கும் விநாயகாலயத்தின் விமானம்.

கிருத, த்ரேதா, த்வாபர, கலி ஆகிய நான்கு யுகங்களிலும் நான்கு ஜோடி கழுகுகள் இத்திருக்கழுக்குன்றத்திலுள்ள ஈசுவரனைப் பூஜைசெய்து முக்தியடைந்ததாகப் புராணங்கள் கூறுகின்றன.

கிருத யுகத்தில் சால்மலி யென்னும் தேசத்தில் வஸித்த விருத்தசிரவணஸ் என்னும் மஹாப்பிராமணனுடைய தபோ மஹிமையால் சண்டன் பிரசண்டன் என்று இரண்டு கழுகுகள் ஸ்ருஷ்டிக்கப்பட்டன. அவைகளுக்குப் பக்ஷிக்கூட்டத்தின் தலைமையை கொ

டுப்பதாக அப்பிராமணன் சொல்லியும் அதை அவைகள் லக்ஷ்யம் செய்யாமல் இந்த க்ஷேத்ரத்துக்கு வந்து ஈசுவரனைப் பூஜைசெய்து வந்தன. அவைகளின் பக்திக்கு ஈடு பட்டு ஈசுவரனும் அவைகளை தமது கணங்களுள் பிரமுகர்களாகச் செய்துகொண்டார்.



வேதகிரிக்கு ஸமீபத்திலுள்ள காக்கைக்குன்று.

அடுத்த யுகமான த்ரேதாயுகத்தில் ராமாயணத்தில் சொல்லப்பட்டிருக்கும் ஜடாயு ஸம்பாதி என்னும் இரண்டு கழுகுகளும் இங்கு பூஜை செய்ததாக சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விரண்டு கழுகுகளும் எது வேகமாகப் பறக்கிறது என்று போட்டிபோட்டுக் கொண்டு ஸூர்யனை நோக்கி அதிவேகமாய்ப் பறந்து செல்லும்பொழுது ஹம்ஸமஹரிஷியானவர் இவைகளின் வேகத்தைப்பார்த்து ஸூர்யபகவானுக்கு எங்கு ஏதாவது அபா

யம் நேர்ந்துவிடுமோ வென்று பயந்து ஸம்பாதியின் இறகுகள் எறிந்து மலயபர்வதத்தில் விழும்படியாகவும் ஜடாயுவை விந்திய பர்வதத்தில் விழும்படியாகவும் சபித்தார். இச் சாபத்திலிருந்தும் விமோசனத்தைத் தேடிக்கொண்டு இவ்விரண்டு கழுகுகளும் இந்த



திருக்கழுக்குன்றம் மலைமேலுள்ள கோயில்.

க்ஷேத்ரத்தையடைந்து மார்க்கண்டேய மஹரிஷியின் வார்த்தைக்கிணங்கி இங்குள்ள ஈசுவரனைப் பூஜித்தன. ஈசுவரனும் அவைகளுக்கு முன் பிரஸன்னராகி ஸ்ரீராமாவதாரத்தின் பொழுது அவைகளுக்கு சாபவிமோசனம் ஏற்படுமென்று அனுக்ரஹித்து மறைந்தார்.

பிறகு துவாபரயுகத்தில் சம்புகுப்தன் மஹாகுப்தன் என்னும் இரண்டு ஸகோதரர்கள் இந்த க்ஷேத்ரத்தில் தபஸ் செய்தார்கள். அவர்களுள் ஒருவன் சிறந்த சிவபக்தனுகவும் மற்றொருவன் தேவீபக்தனுகவும் இருந்தார்கள். இவர்களுள் எந்த தெய்வம் உயர்ந்தது



கோயிலுக்குள்ளிருக்கும் நந்தி தீர்த்தக்குளமும் மலைக்கோயிலும்.

என்று விவாதம் ஏற்பட்டுவிட்டது. கடைசியில் ஈசுவரனையே இவ்விவாதத்தைத் தீர்க்க வேணுமாய்க் கேட்டுக்கொண்டார்கள். அவர் தாமும் சக்தியும் ஒன்றேதானென்றும் பேதமில்லை யென்றும் சொல்லியும் அவர்கள் கேட்கவில்லை. அதனுல் ஈசுவரன் அவர்களை கழு

காகப் போகும்படி சபித்தார். கழுகு சரீரத்தோடேயே வெகுகாலம் ஈசுவரனைப் பூஜித்துவிட்டுக் கடைசியாக இங்குள்ள இந்திர தீர்த்தத்தில் ஸ்நானம்செய்து நிஜரூபத்தையடைந்தார்கள்.



கோயிலுக்குள்ளிருக்கும் தூணமண்டபம்.

இக்கலியுகத்திலோ வெனின் இரண்டு சகோதரர்களான மஹர்ஷிகள் பூஷா என்றும் விதாதா என்றும் பெயருள்ளவர்கள் ஸம்ஸாரத்தில் வைராக்யமடைந்து காட்டுக்குச் சென்று அங்கு மோக்ஷத்தையடைய விரும்பி தபஸ்செய்தார்கள். அவர்களுக்கு ஈசுவரன் பிரத்யக்ஷமானதும் உடனே தங்களுக்கு மோக்ஷமளிக்கும்படி மன்றாடினார்கள்.

அவர்கள் முக்தியடைய இன்னும் பக்குவமாகவில்லையென்றும் இன்னுமொரு ஜன்மம் எடுத்தாக வேண்டுமென்றும ஈசுவரன் சொன்னர். ஆனுல் அவர்கள் அவ்வார்த்தையைக் கேளாமல் அதில் அதிருப்திகொண்டவர்களாய் ஈசுவரனை நிர்ப்பந்தித்தார்கள். ஈசுவர



பிரம்மோத்ஸவம் ஆன்றவது ஒரு நாள்.

னும் அவர்களை தக்ஷணமே கழுகுஜன்மமடையும்படிக்கும் பாதகண்டத்திலுள்ள புண்ய க்ஷேத்ரங்களில் ஸஞ்சாரம் செய்யும்படிக்கும் ஆக்ஞாபித்துச் சென்றுவிட்டார். அம்மஹர் ஷிகள்தான் இப்பொழுது கழுகுருபமாய் திருக்கழுக்குன்றத்துக்கு பிரதிதினமும் வருகிறுர்கள்.

இவ்விரண்டு கழுகுகளும் சிவாபராதத்தால் சபிக்கப்பட்டுக் கழுகு உருவம்பெற்ற இரண்டு ரிஷிகள் எனப்புராணக்கதை கூறுகின்றது. இக் கலியுக முடிவில் அவைகள் திரும்பவும் முந்திய உருவம் பெற்று முக்தி பெறுமாம்.



கதலி வாஹனம்.

இத்திருக்கழுக்குன்றத்துக்கு 'வேதகிரி' என்ற இன்னொரு பெயரும் உண்டு. நான்கு வேதங்களும் நான்கு குன்றுகளாக ஏற்பட்டு அவைகளின் மீதுள்ள கோயிலில் சிவபிரான் கோயில்கொண்டிருப்பதாக ஒரு ஐதிஹ்யம் ஏற்பட்டுள்ளது.

ஒருக்கால் தேவேந்திரன் கடவுளை இங்கு பூஜித்ததாகவும், அதுமுதல் பன்னிரண்டு வருஷத்திற் கொருமுறை இங்கு வந்து அப்பூஜையை இடிரூபமாக நடத்தி வருவதாகக் கூறுகின்றனர்.

இப் புண்ணியகிரி சுமார் 500 அடி உயரமுள்ளது. இந்த கிரியைப் பிரதக்ஷிணம் வந்தால் வியாதிகள் நீங்கி தேஹ ஆரோக்கியம் ஏற்படுவதுடன் புண்ணியமும் உண்டெனக் கூறுவர்.



கோயிலுக்குள்ளிருக்கும் ஸந்நிதிகளும் மலைக்கோயிலும்.

## ருத்திரகோடி க்ஷேத்திரம்.

ருத்திர கணங்கள் அசுரர்களை ஒருக்கால் கொல்ல நேர்ந்த பாவத்தைப் போக்கடித்ததிலிருந்து இவ்விடத்திற்கு "ருத்திரகோடி" யென்ற இன்னொரு பெயரும் இடப்பட்டதாம். இது ஸம்பந்தமாய் ஏற்பட்ட கோயில் சங்க தீர்த்தத்தின் ஸமீபத்தில் அதன் தென்கிழக்கில் இருந்து வருகிறது.



ஸ்ரீ ஸுப்ரஹ்மண்யஸ்வாமி வள்ளிதேவஸேனையுடன்.

## ஆதிநாராயணபுரம்

தவிரவும் இதற்கு "ஆதிநாராயணபுரம்" என்ற புராணப் பெயரும் உண்டு. ஒரு தடவை ஸ்ரீமந் நாராயணமூர்த்தி இங்கு தபசு செய்திருந்த காரணங் கொண்டு அப்பெயரை இட்டனராம்.

## பக்ஷி தீர்த்தம்.

இந்த மலையிலுள்ள கோயிலுக்கு எழுபதடிக்குக் கீழ் நாற்பதடி நீளம் இருபதடி அகலம் நாற்பதடி ஆழமுள்ள ஓர் பிளப்பு அல்லது இடைவெளி ஒரு பாறையில் இருக்கிறது. இதில் வருஷம் முழுவதும் தண்ணீர் இருந்துகொண்டேயிருக்கும். இந்த தீர்த்தத்திற்குத் தான் "பக்ஷி தீர்த்தம்" என்ற பெயர் இடப்பட்டிருக்கிறது. இப்பெயரினால் தான் இம் மலைக்கும், ஊருக்கும்கூட "பக்ஷி தீர்த்தம்" என்ற காரணப்பெயர் வந்ததெனக் கூறலாம்.

இந்தத் தீர்த்தத்தைப் பக்ஷி தீர்த்தமெனக் கூறுவானேன் எனில், ஒருக்கால் கழுகுகள் அங்குள்ள ஓர் கல்லைத் தங்கள் மூக்கினால் கொத்த அவ்விடத்திலிருந்து ஜலம் கசிந்து வந்ததாம். அந்நீரை கங்கை நீரெனக் கூறுவார்கள். இந்த ஸம்பவத்தால் தான் இந்த தீர்த்தத்திற்குப் "பக்ஷி தீர்த்தம்" என்ற பெயர் வந்ததாம்.



சங்கதீர்த்தக்குளமும், காக்கைக்குன்றும்.

மாணிக்கவாசகர் இங்கு தான் ஈசன் அருளால் ஞானோதயம் பெற்றாரெனவும் சொல்லப்படுகின்றது.

சங்க தீர்த்தம்.

ஒருக்கால் மார்க்கண்டேயர் சிவனுக்கு இங்குள்ள குளத்தின்கரையில் அபிஷேகம் செய்து கொண்டிருக்கையில் சங்கம் வேண்டி யிருந்ததால் அக்குளத்தில் தேடிப்பார்க்க அகப்படாததால் தனது தபோ மகிமையால் அதிலிருந்து ஒரு சங்கை உத்பத்தி செய்வித்து அதுமுதல் மேற்கூறிய ஸம்பவத்தின் அறிகுறியாகப் பன்னிரண்டு வருஷங்களுக்கொருதரம் அத் தீர்த்தத்தில் ஒரு சங்கம் உத்பத்தியாகும்படியும் அருளிச்சென்றனர். அவ்வாறே அங்கு அனேகம் சங்கங்கள் ஜனிக்க எடுக்கப்பட்டு சிதம்பரம், மதுரை முதலிய க்ஷேத்திரங்களுக்குக் கூட அனுப்பப்பட்டன.



சங்கதீர்த்தக்குளத்திலிருந்து எடுத்த சங்கு.

இப் புண்ணிய தீர்த்தத்தில் ஸ்நானம்செய்து வியாதி நீங்கினவர்கள் பலருளர்.



ரிஷி கோபுரம் என்று சொல்லப்பட்ட இரண்டாவது கிழக்கு கோபுரம்.

## கீழ்க் கோயில்

கோயிலுக்குள் தென் மேற்கில் வண்டுவனப்பிள்ளையார் ஸந்நிதி ஒன்றுண்டு. கதலிக் காட்டில் (வாழைத் தோட்டம்) ஓரிடத்தைத் தோண்டுகையில் அகப்பட்ட இந்த விநாயக விக்கிரஹத்தை அது அகப்பட்ட இடத்திலேயே ஸ்தாபித்ததிலிருந்து அவருக்கு அப்பெயர் இடப்பட்டதாம். இந்த ஸ்தலத்திற்கு ஏற்பட்ட விருக்ஷம் வாழை. பிரத்தியக்ஷ வேதகிரீசுவரர் கோயிலுக்குக் கிழக்கில் இருபக்கங்களிலும் அழகிய கால்களால் தாங்கப்பட்டுள்ள அழகியமண்டபம் ஒன்று அமைக்கப்பட்டுளது. கல் தூண்களில் அழகிய குதிரை



ருத்ரன்கோயிலின் கிழக்குக் கோபுரம்.

கள் செதுக்கப்பட் டிருக்கக் காணலாம். இது தெற்கு நோக்கியிருப்பதுடன் அம்மன் திரிபுரசுந்தரி நவராத்திரி தினங்களில் இங்கு தான் அலங்காரம் செய்யப்படுவது. இந்த மண்டபத்தின் வடகோடிக் கருகில் ஓர் அறையில் நடராஜ விக்கிரஹம் ஒன்று ஸ்தாபிக்கப் பட்டிருக்கிறது.

## ஸூரகுரு விருத்தாந்தம்.

இந்தக் கோயிலை ஸ்தாபித்தவரது சரித்திரம் விசேஷ பெருமையுடையது. மூள்



திருக்கழுக்குன்றம் தோற்றக் காட்சி.

ளம்பன்றி ரூபமாக ஓர் அரக்கன் காட்டுப் பிராணிகளை ஹதம் செய்துகொண்டு திரிந்ததைக் கண்டு கோபமூண்ட மார்க்கண்டேயர் அவனை நித்திய முள்ளம்பன்றியாக விருக்கக் கடவதென்று சபிக்க அவன் பயந்து மன்றாடிப் பிரார்த்தநின் பேரில் அவர் மனமிரங்கி மஹாபலிபுர மன்னவன் சுரகுருவென்பவனால் கொல்லுண்டு முன் உருவத்தை யடைவாய் எனச் சாபவிமோசன மார்க்கம் ஏற்படுத்தினாராம்.

இந்த சுரகுரு என்பவன் சோழராஜாக்களது வமிசத்தைச் சேர்ந்தவன். உத்தம சோழ பாரம்பரையிலுதித்தவன். இவனது ராஜதானி மஹாபலிபுரமாக விருந்தது. இதுகாறும் இது சரித்திர கர்த்தாக்களுக்குத் தெரியாமலிருந்திருக்கிறது. முதலாவது குலோத்துங்கன் (கி. பி. 1070-1118) காலத்தில் கலிங்க தேசத்தை ஜயித்த பெருமை கொண்டாட "துங்கலிங்கத்துப் பரணி"யில் அடியில் கண்ட விவரம் குறிப்பிடப்பட்டிருக்கிறது :—

"சுரகுருவின் தூதாகி யமன் பாற்செல்வோன் துணித்துவைத்த சிரமன்று நின்ற பேயைச் சிரமரிய அதற்குறவா யொளித்தும் போந்த சில பேயைத் திருவுள்ளத் தறிதியன்றே."

இந்த சுரகுரு மஹாபலிபுரத்தில் அரசாண்டு கொண்டிருக்கையில் திருக்கழுக்குன்றத்து ஜனங்கள் அவனிடம் சென்று காட்டு மிருகங்களால் தங்களுக்கு நேரிட்டு வரும் தீங்குகளை எடுத்துக் கூறி அவைகளை வேட்டையாடிக் கொல்லுமாறு வேண்டினர்.

தனது மந்திரி ஹிரண்யனுடனும் அனேகம் யானை, குதிரை, ஒட்டகம் முதலியவைகளுடனும் வேட்டையாடச்சென்று சுரகுரு மேற்கூறிய முள்ளம்பன்றியைக் கண்டு அதன்மீது அஸ்திரம் பிரயோகிக்க அது இறந்து மானிடரூபத்தை அடைந்தது. இது கோயில் சுவரில் காட்டப்பட்டிருக்கிறது.



சங்கதீர்த்தக்குளமும், திருக்கழுக்குன்றம் மலையும்.

இந்த வேட்டையில் சாகுரு தவறிப்போய் ஓர் பசுவைக் கொன்றுவிட கோஹத்தி தோஷம் இவரைப்பிடித்துக்கொண்டது. தனது முன்னோர் ஒருவர் திருவாரூரில் செய்ததுபோல தேர்க்காலில் விழுந்து இறக்கத் தீர்மானித்தபொழுது ஒருபசு அவர் முன் தோன்றிப் பிறகு ஓர் யுவதியாக மாறித் தான் திலோத்தமை என்ற தேவதாசி என்றும், இந்திரனது தூண்டுதலால் பசு உருவமெடுத்து நந்தி தீர்த்தத்தினருகில் தபசு செய்து கொண்டிருந்த நந்தியினது தவத்தைக் கெடுக்க முயன்றதால் சபிக்கப்பட்டு அன்று அவனது கிருபையால் முன் உருப் பெற்றதையும் கூறினள். அவள் மறைந்தபின்னர் வியாகுலத்துடன் கூடிய இவரும் ,தனது நாயும் மந்திரியும் இங்குள்ள "ஸம்பாதி தீர்த்தம்" என்ற புண்ணிய தீர்த்தத்தில் ஸ்நானம் செய்ததால் குஷ்டரோகம் நீங்கியதைக் கண்டு அதிசயித்தார்.

பிறகு அரசனும் மந்திரியும் மஹாபலிபுரத்தை நோக்கி வந்து கொண்டிருக்கையில்



திருக்கழுக்குன்றம் மலைக்கோயில்.



மலையின் மேற்குப்பக்கத்திய காக்ஷி.

தங்களை எதிர்த்த கழுகுகளைத் தாங்கள் யாதும் செய்ய முடியாமல் போனதைக் கண்டு ஆராய்ச்சி செய்து பார்க்குங்கால் தனக்கு "கோஹத்தி" தோடனை யென வறிந்தார்.

பிறகு அப் பறவைகளால் போதிக்கப்பட்டு அவரும் அவாது மனைவி சுகுணவல்லி யுமாக நந்தி தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து கரையேறுகையில் அவரிடமிருந்த பாபங் கள் ஒரு காக்கையாக மாறி வேதகிரீசுவார் கோயிலுக்குத் தென் மேற்கில் மலை உரு வமாக விழும்படி நேர்ந்ததாம். இதற்கு தற்காலம் "காக்கைக்குன்று" என்று பெயர். இதில் செடி, கொடி முதலியன முளைப்பதில்லை. இதனால் பாபம் நீங்கிப் பரிசுத்



திருக்கழுக்குன்றம் மலைக்கோயில் மற்றொருகாக்ஷி.

தாகி அக்கோயிலைக்கட்டி முடித்து பிராமணர்களுக்கு மலையடிவாரத்தில் அக்கிரஹாரமும் கட்டிவைத்தனா. பிறகு இவர் வெகுகாலம் இந்த ஸ்தலத்திலே தங்கி காலமடைந்ததாகவும் அவரது ராணியும் உடன்கட்டை ஏறினதாகவும் தெரியவருகிறது. அப்படி அவர் அரண்மனை இருந்த இடம் தற்காலம் கொத்திமங்கலத்திற்கு சமீபத்திலிருந்திருக்கலாமென்று தோற்றுகிறது. "சுரகுரு நாடகம்" என்னும் நாடகத்தில் இவ்வாசனுல் இக்கோயில் கட்டப்பட்ட ஸம்பவங்கள் முழுதும் நடித்துக் காட்டப்பட்டிருக்கக் காணலாம்.



பன்றியின் சரீரத்திலிருந்து ஒரு அசுரனும், பசுவின் சரீரத்திலிருந்து ஒரு ஸ்திரீயும் வெளிவருதல்.



ஸுரகுரு அரசன்.

## சிலாசாஸனம்.

இந்த வேதகிரீசுவரர் கோயில் சுவர்கள் ஒன்றில் ராஜகேஸரிவர்மன் என்ற சோழராஜன், பல்லவ ராஜாக்கள் விட்டிருந்த மானிய சாஸனத்தைப் புதுப்பித்த விஷயம் வரையப்பட்டுள்ளது.

மேற்கூறிய சுவரில் இன்னொரு இடத்தில் ராஷ்டிரகூட அரசர்கள் ஒருவரது காலத்தில் இக்கோயிலில் ஓர் மண்டபம் அமைத்து அதில் நீர், நெருப்பு முதலியன கொண்டுவந்து கொடுக்கவும் சாத்தன் என்பவன் ஒருவனுல் மானியம் விடப்பட்ட விஷயம் கூறப்பட்டுளது.



ஸூரகுருவின் ரதம்.

இன்னும் அடியில் கண்ட முக்கிய சாஸனங்களும் இருந்து வருகின்றன :—

திருக்கழுக்குன்றத்தில் "பெரியபுராண" த்தில் குறிப்பிடும் நாயன்மார்களில் ஒருவரான நமிநந்தியடிகளுக்கு மடம் ஏற்பட்டிருந்த விஷயம் அடியில்கண்ட சாஸனத்தால் ("தென் இந்திய சாஸனங்கள்" 3-ம் புத்தகம் 165-ம்பக்கம்) வெளிவரும்:—

"ஸ்வஸ்தி ஸ்ரீ புகழ்சூழ்ந்த புணரி அகழ்சூழ்ந்த புவியில் பொன்நேமி அளவுந்தன்நேமி நடப்ப விளங்கு ஜயமகளிளங் கொப்பருவத்துச் சக்கர கொட்டத்து விக்கிரமத் தொழிலால் புது மணம் புணர்ந்து மதுவரையீட்டம் வயிராகரத்து வாரி அயில் முனைக் கொந்தள வரைசர் தந்தளமரிய வாளுறை கழித்து தோள்வலி காட்டிப் பொர்ப் பரி நடத்திக் கீர்த்தியை நிறுத்தி வடதிசை வாகை சூடி தென்திசை தெமருகமலப் பூமகள் பொதுமையும் பொன்னி ஆடையும் நன்னிலப்பாவையும் தனிமையும் தவிர்த்து புனிதரு திருமணி மகுடம் முறைமையில் சூடி, தன்னடி பிரண்டுங் தடமுடியாகத் தொன்னிலவேந்தர் சூட முன்னை மநுவாறு பெருகக் கலியாறு வறப்புச் செங்கோல் திசைதொறுஞ் செல்ல வெண்குடை யிருநில விளாகம் மெங்கணுந் தணது திருநில வெண்ணிலாத் திகழ ஒரு தனிமெருவிற் புலி விளையாட ஆழ்கடல் தீவாந்தாத்து பூபாலர் திறை விடுதந்த கலஞ்சொரிகளிறு முறை நிற்ப விலங்கிய தென்னவன் கருந்தலைப் பருந்தலைத்திட தன் பொன்னகர் புறத்திடை கிடப்ப இன்நாள் பிற்குலப் பிறைபோல் நிற்பிழை என்னும் சொல்லெதிர் கொடிற்றல்லது தன் கைவில்லெதிர் கொடா வேழகுலத் தாசு அளத்தியிலிட்ட களிற்றின திட்ட முட்பட வேழ்பரியும்



ஸூரகுருவின் பாபம் ஒரு காக்கைரூபமாக அவன் சரீரத்திலிருந்து வெளிவருகிறது.



ஸூரகுருவின் யானைப்பட்டாளம்.

கெட்ட தன் மானமும் கூறின
வீரமுங் கிடப்ப எறின பலைக
ளு முதுகு நெளிப்ப இழிந்த
னதிகளுஞ் சுழன் றுடைந் தொ
ட விழுந்தகடல்களுந் தலை வி
ரித் தலமரக் குடதிசைக்காடு
உகந்ததானுந் தாதையும் பன்
னுளிட்ட பல்பல முதுகும் ப
யத்தெதிர்மாறிய ஜயப் பெருந
திருவும் பழியுகந்து குடுத்தபுக
ழின் செல்வியும் வாளாரொண்
கண் மடந்தையரீட்டமு மீளா
து குடுத்த வெங்கரி நீரையுங்
கங்கமண்டலமுஞ் சிங்கணமெ
னனும் பாணியிரண்டும் ஒரு
விசை கைக் கொண் டிண்டிப
புகழொடு பாண்டி மணடல
முங் கொள்ளத் தடைத்து வேழ் பரித்தலங்களும் பொரு பரித்தலங்களுந் தந்தா வாரியுமு
மூடைத்தாய்ப் பரந்து வடதிசை தென்கடல் பாய்வது போலத் தன்பெருஞ்சேனையை
யேவப் பஞ்சதரைவரும் பொருத்
போர்க்களத் தஞ்சி வெருநெளித்
தோடி அரணெனப் புக்க கடாரத்
துடைத்து னாட்டடிப் படுத்து
மற்றவர் தம்மை வனசர ராக்கிக்
கொற்ற வெஞ்சுரம் பற்றி கொற்ற
விஜயஸ்தம்ப மெழில் பெற நிறு
த்தி முத்தின் சலாபமும் முத்த
மிட் பொதியலும் மத்த வெம்பரி
மய்யச் சய்யமுங் கன்நியுங் கைக்
கொண்டருளித் தென்னாட்டெல்
லைகாட்டிக் குடமலை நாட்டுள்ள
சாவே றெல்லாத் தனிவிசும்பெற
எறிய தனமருகுலத் தலைவரைக்
குறுகுலர் குலையக் கோட்டா
றுட்பட நெறி தொறும் நிலைக
ளிட்டருளி அப்புலத் தலங்கமுங்
கங்கமண்டலங் கைப்படுத்தருளி
இறை கொளாமுங் திருப்புயத்



ஸூரகுருவின் ஒட்டகைப்பட்டாளம்.



புகார் சொல்லுவதற்காக அரண்மனை வாசலில் இருக்கும்
மணியை ஒரு பசு அடித்தல்.

தலங்கமும் போல் வீரமுந் தியாகமும் விளங்கப் பார் தொழச் சிவனிடத்துமையெனத் தியாகவல்லி அவனி முழுதுடை யாளுடனிருப்ப அவளுடன்கங்கை வீற்றிருந்தென மங்கையர் திலகம் ஏழிசை வல்லவி ஏழுலக முடையாள் வாழிரும் பொன்னிந் திருப்ப ஊழியு மவனி முழுதுடையாளொடும் வீரஸிம்ஹாஸனத்து வீற்றிருந்தருளிய கோவிராஜ கேசரிபந்மரான சக்கரவர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்கசோழதேவர்க்கு யாண்டு நாற்பத்திரண்டாவது ஜயங்கொண்ட சோழமண்டலத்து ஆமூர்க் கோட்டத்துக் குமிழி நாட்டு வானவ மஹாசதுர்வெதிமங்கலத்து மஹாஸபையோம் நிலவிலையாவணக் கையெழுத்து களத்தூர்க் கொட்டத்து தனியூர் நாட்டு உலகளந்த சோழபுரமான செம்பியந் திருக்கழுக்குன்றத்து உடையார் திருக்கழுக்குன்றமுடைய மஹாதேவர் கோயிலில் ஆதிதாஸர் சண்டேச்வர தேவற்கு நாங்கள் மடப்புறமாக விற்றுக் குடுத்தநிலமாவது எங்களூர் மேல் பிடாகை ஈரைப்பாக்கம் காடு கொளா.........டு வெட்டிக் கட்டை பறித்துத் திருத்திக்கொள்வதாகக் குடுத்த நிலத்துக்குக் கீழ்பார்க் கெல்லையு ரொடகத் தெல்லை யுறவும் தென்பாற் கெல்லை தாழைவேட்டெல்லை யுறவும் மெற்பார்க் தெல்லை ஊரகம் பாக்கத் கெல்லை உறவும் வடபாற்கெல்லை தண்டுறை எல்லை உறவும் நா.........வு பட்ட நீர் நிலமும் புஞ்சை நிலமு மேனோக்கின மாமுங் கீனோக்கின கிணறும் இவ்வூர் மடைவிளாகத்திருக்கும் நமநந்தி அடிகள் மடத்துக்கு மடப்புறமாக.

## தேவாரப்பாடல்கள்

திருஞானஸம்பந்தர் பாடியது:—

### முதல் திருமுறை—பண்—குறிஞ்சி.

தோடுடையானொருகா திற்றூயகுழைதாழ
வேடுடையான் றலைகலனா விரந்துண்ணு
நாடுடையானள்ளிருளேம நடமாடுங்
காடுடையான் காதல் செய்கோயில் கழுக்குன்றே. 1

கேணவல்லான் கேழல் வெண் கொம்பு குறளாமை
பூணவல்லான் புரிசடை மேலோர் புனல் கொன்றை
பேணவல்லான் பெண்மகடன்னை யொருபாகங்
காணவல்லா நன்காதல் செய்கோயில் கழுக்குன்றே. 2

தேனகத்தார் வண்டது வுண்டதிகழ் கொன்றை
தானகத்தார் தண்மதி சூடித்தலை மேலோர்
வானகத்தார் வையகத்தார்கடொழுதேத்துங்
கானகத்தான் காதல் செய்கோயில் கழுக்குன்றே. 3

துணையல் செய்தான் றூயவண்டியாழ்செய் சுடர்க்கொன்றை
பிணையல் செய்தான் பெண்ணினல்லாளை யொருபாக
மிணையல் செய்யா விலங்கெயின் மூன்று மெரியுண்ணக்
கணையல் செய்தான் காதல்செய் கோயில் கழுக்குன்றே. 4

பையுடைய பாம்பொடு நீறு பயில்கின்ற
மெய்யுடையான் வெண்பிறை சூடிவிரிகொன்றை
மையுடைய மாமிடற்றண்ணன் மறிசேர்ந்த
கையுடையான் காதல் செய்கோயில் கழுக்குன்றே. 5

வெள்ளமெல்லாம் விரிசடை-மேலோர் விரிகொன்றை
கொள்ளவல்லான் குரைகழலேத்துஞ் சிறுத்தொண்ட
ருள்ளமெல்லா முள்கிநின்றாங்கேயுடனாடுங்
கள்ளம் வல்லான் காதல் செய்கோயில் கழுக்குன்றே. 6

ஆதல் செய்தானரக்கர்தங்கோனை யருவரையி
னோதல்செய்தா னொடிவரையின் கண்விரலூன்றிப்
பேர்தல் செய்தான் பெண்மகடன் னோடொருபாகங்
காதல் செய்தான் காதல்செய் கோயில் கழுக்குன்றே. 7

இடந்த பெம்மானே னமதாயு மனமாயுக்
தொடர்ந்த பெம்மான் றாமதிசூடி வரையார்தம்

மடந்தைபெம்மான் வார்கழலோச் சிக்காலனைக்
கடந்த பெம்மான் காதல் செய்கோயில் கழுக்குன்றே. 8




தேய நின்றான் திரிபுரங் கங்கை சடைமேலே
பாயநின்றான் பலர்புகழ்ந்தேத்த வுலகெல்லாஞ்
சாய நின்றான் வன் சமண் குண்டர் சாக்கியர்
காயநின்றான் காதல் செய்கோயில் கழுக்குன்றே. 9

கண்ணுதலான் காதல் செய்கோயில் கழுக்குன்றை
நண்ணிய சீர்ஞான சம்பந்தன் றமிழ் மாலை

பண்ணியல் பாற்பாடிய பத்துமிவை வல்லார்
புண்ணியராய் விண்ணவ ரோடும் புகுவாரே. 10

---




திருக்கழுக்குன்றம் கிராமத்தில் மலை இருக்கும் இடத்தைக் குறிக்கும் இடம்.

திருநாவுக்கரசு சுவாமிகள் பாடியது:—

ஆறும்திருமுறை—திருத்தாண்டகம்.

மூவிலைவேற்கை யானை மூர்த்தி தன்னை முதுபிணக்கா டுடை யானை முதலானானை
ஆவினி லைந்துகந்தானை அமரர்கோனை ஆலால முண்டுகந்த ஐயன் றன்னைப்
பூவினின்மேனான்முகனு மாலும் போற்றப் புணர்வரிய பெருமானைப் புனிதன் றன்னைக்
காவலனைக் கழுக்குன்றம் அமர்ந்தான் றன்னைக் கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேனானே.

பல்லோடு தலை சடைமே லுடையான் றன்னைப் பாய்புலித் தோ லுடையானைப் பகவன் றன்னைச்
சொல்லோடு பொருளனைத்து மானான்றன்னைச் சுடருருவி லென்பறாக் கோலத் தானை
அல்லாதகாலனை முன் னடர்த்தான் றன்னை ஆலின்கீ ழிருந்தானை அமுதானானைக்
கல்லாடை புனைந்தருளுங் கபாலியைக் கற்பகத்தைக் கண்ணாரக்கண்டேனானே.

---

சுந்திரமூர்த்தி சுவாமிகள் பாடியது:—

ஏழாந்திருமுறை—பண்—நண்டபாஷை.

கொன்றுசெய்த கொடுமையாற் பல சொல்லவே
நின்றபாவம் வினைகடாம்பல நீங்கவே
சென்று சென்று தொழுமின்றேவர் பிரானிடங்
கன்றி னோடு பிடிசூழ்தண் கழுக்குன்றமே. 1

இறங்கிச்சென்று தொழுமினின்னிசைபாடவே
பிறங்கு கொன்றைச் சடையனெங்கள் பிரானிடம்
நிறங்கள் செய்த மணிகணித்திலங்கொண்டிழி
கறங்கு வெள்ளை யருவித்தண் கழுக்குன்றமே. 2

நீளநின்று தொழுமினித்தலு நீதியா
லாளுநம்ம வினைகளல்கிய ழிந்திடத்
தோளுமெட்டுமுடைய மாமணிச்சோதியான்
காளகண்ட னுறையுந்தண் கழுக்குன்றமே. 3

வெளிறு தீரத்தொழுமின்வெண் பொடியாடியை
முளிறிலங்கு மழுவாளன் முந்தி யுறைவிடம்
பிளிறு தீரப்பெருங்கைப்பெய்ம்மத மூன்றுடைக்
களிறினோடு பிடிசூழ்தண் கழுக்குன்றமே. 4

புலைகடீரத் தொழுமின் புன்சடைப்புண்ணிய
னிலைகொள் சூலப்படைய னெந்தை பிரானிட
முலைகளுண்டுதழுவிக்குட்டியொடுமுசுக்
கலைகள்பாயும் புறவிற்றண் கழுக்குன்றமே. 5

மடமுடைய வடியார்தம் மனத்தேயுற
விடமுடைய விடறன் விண்ணவர் மேலவன்
படமுடைய வரவன்றான் பயிலும் மிடங்
கடமுடைய புறவிற்றண் கழுக்குன்றமே. 6

ஊனமில்லா வடியார் தம்மனத்தேயுற
ஞானமூர்த்தி நட்டமாடி நவிலும் மிடங்

தேனும் வண்டுமதுவுண்டின்னிசைபாடியே
கானமஞ்ஞை யுறையுந் தண் கழுக்குன்றமே 7
அந்தமில்லாவடியார் தம்மனத்தேயுற
வந்துநாளும் வணங்கி மாலொடுநான்முகன்
சிந்தைசெய்த மலர்கணித்தலுஞ் சேரவே
சந்தநாளும் புறவிற்றண் கழுக்குன்றமே. 8

பிழைகடீரத் தொழுமின் பின்சடைப் பிஞ்ஞகன்
குழைகொள்காதன் குழகன்றுறையுமிட
மழைகள் சாலக்கலித்து நீடுயர் வேயவை
டிழைகொண் முத்தஞ்சொரியுந் தண் கழுக்குன்றமே 9

பல்லில் வெள்ளைத்தலையன்றான் பயிலுமிடங்
கல்லில் வெள்ளை யருவித்தண் கழுக்குன்றினை
மல்லின்மல் குதிர டோளூரன் வனப்பினாற்
சொல்லல் சொல்லித் தொழுவாரைத் தொழுமின்களே. 10

---

## திருவாசகப்பாடல்கள்.

---

மாணிக்கவாசக சுவாமிகள் பாடியது:—

### கட்டளை கலித்துறை.

பிணக்கிலாத பெருந்துறைப் பெருமானுன் நாமங்கள் பேசுவார்க்
கிணக்கிலாததோர் இன்பமே வருந்துன்பமே துடைத்து எம்பிரான்
உணக்கிலாததோர் வித்து மேல்விளையாமல் என்வினை ஒத்தபின்
கணக்கிலாத்திருக்கோலம் நீ வந்து காட்டினாய் கழுக்குன்றிலே. 1

பிட்டுநேர்பட மண்சுமந்த பெரும் துறைப்பெரும் பித்தனே!
சட்டனேர்பட வந்திலாத சழக்கனேனுனைச் சார்ந்திலேன்,
சிட்டனே! சிவலோகனே! சிறுநாயிருங் கடையானவெம்
கட்டனேனையும் ஆட்கொள்வான் வந்துகாட்டினாய் கழுக்குன்றிலே. 2

மலங்கினேன் கண்ணினீரைமாற்றி மலங்கெடுத்த பெருந்துறை
விலங்கினேன் வினைக்கேடனேன் இனிமேல் விளைவதறிந்திலேன்
இலங்குகின்ற நின்சேவடிகள் இரண்டும் வைப்பிடமின்றியே
கலங்கினேன் கலங்காமலே வந்துகாட்டினாய் கழுக்குன்றிலே. 3

பூணொணாததோர் அன்புபூண்டு பொருந்தி நாடொறும் போற்றவும்
நாணொணாததோர் நாணம் எய்தி நடுக்கடலுள் அழுந்திநான்

பேணாத பெருந்துறைப் பெருந்தோணிபற்றி உகைத்தலும்
காணாத்திருக்கோலம் நீவந்துகாட்டினாய் கழுக்குன்றிலே. 4

கோலமேனிவாராகமே! குணமாம் பெருந்துறைக் கொண்டலே!
சீலமேதுமறிந்திலாத என் சிந்தைவைத்த சிகாமணி!
ஞாலமேகரியாக நானுனை நச்சிநச்சிட வந்திடும்
காலமேஉனை ஓதநீவந்து காட்டினாய் கழுக்குன்றிலே. 5

பேதமில்லதோர் கற்பளித்த பெருந்துறைப் பெருவெள்ளமே!
ஏதமேபல பேச நீ எனை ஏதிலார் முனமென்செய்தாய்?
சாதல் சாதல் பொல்லாமை யற்ற தனிச்சரண் சரணாம் எனக்கு
ஆதலானுனை ஓதநீவந்துகாட்டினாய் கழுக்குன்றிலே. 6

இயக்கிமார் அறுபத்துநால்வரை எண் குணஞ்செய்த ஈசனே!
மயக்கமாயதோர் மும்மலம்பழ வல்வினைக்குளழுந்தவும்,
துயக்கறுத்தெனை ஆண்டுகொண்டு நின்றாய்மலர்க்கழறந்தெனைக்
கயக்கவைத்தடியார் முனே வந்துகாட்டினாய் கழுக்குன்றிலே. 7

## பட்டினத்தடிகள் பாடியது.

காடோ செடியோ கடற்புறமோ கனமேமிகுந்த
நாடோ நகரோ நகர்நடுவோ நலமேமிகுந்த
வீடோ புறந்திண்ணையோ தமியேனுடல் வீழுமிடம்
நீடோய்கழுக்குன்றிலீசா வுயிர்துணை நின்பதமே.





மஹாபலிபுரம் பொதுக்காக்ஷி.

# மஹாபலிபுரம்.

மஹாபலிபுரம், மாவலிபுரம், மஹாமலைபுரம் மாமல்லபுரம், கடன் மல்லை என்று பற்பலவிதமாகக் கூறப்படும் இந்த க்ஷேத்திரம் செங்கல்பட்டுக்குச்சுமார் இருபது மையில் தென்கிழக்கில் ஸமுத்திரக்கரையில் உள்ளது. ஐரோப்பியர்களுக்கு 'ஏழுகோவில்' ஊர் என்றால் நன்கு புறியும். இந்த ஸ்தலமும் முக்கியமாய் விஷ்ணுவின் தச அவதாரங்களில் ஒன்றாகிய வாாஹ அவதாரத்திற்குப் பெயர்போனதாகக்கூறுவார்கள். திராவிடர்களது சிற்பசாமர்த்திய அறிகுறியாக இங்குள்ள ரதங்கள் எற்பட்டிருக்கின்றன வெனக் கூறில் பொருந்தும்.

இங்குள்ள கரைக்கோவில்ஒன்று நீங்கலாக மற்ற ரதங்கள் எல்லாம் அந்தமணல் வெளியிலிருந்த பாறையைக்குடைந்து எற்படுத்தப்பட்டவைகளே ஒழிய வேறில்லை.

இவ்விடத்தியகோவிலில் வாாஹப்பெருமாள் ஆதிசேஷன் என்ற' பாம்பின்மீது வலது காலும், வலது தொடையில் பூதேவியுமாகநிற்பது விசேஷமாகக் கொள்ளப்படல் வேண்டுமெனக்கூறுவார்கள். எனெனில் இங்கு ஓர் அரக்கனால் திருடிக்கொண்டுபோய்க்



மஹாபலிபுரத்தில் பழய தீபஸ்தம்பம் இருந்த குன்று.

கடலில் ஒளித்து வைக்கப்பட்ட பூமாதேவியை மஹாவிஷ்ணு வாராஹ அவதாரமெடுத்துச் சென்று திரும்பக்கொண்டுவந்த விஷயம் காட்டப் பட்டிருக்கிறது. பூதேவியைத்தாங்கி நிற்கும் ஆதிசேஷன் கொஞ்சம் கொஞ்சமாய் ஸமுத்திரத்தினின்றும் கிளம்புவது காட்டப் பட்டிருப்பதைக் காணலாம்.



மஹாபலிபுரத்தில் அர்ஜுனன் தபஸ் செதுக்கப்பட்ட பாறை.

இந்துள்ளகுகைகளில் புராண ஸந்தர்ப்பங்கள் காட்டப்பட்டிருக்கின்றன. ஓரிடத்தில் மஹிஷாஸுரமர்த்தனி என்னும் அம்மன் தனது பரிவாரங்களோடு ராக்ஷஸர்களை நாசப்படுத்திக் கொண்டிருத்தல் காட்டப்பட்டிருக்கிறது.



மஹிஷாஸுரமர்த்தனி செதுக்கப்பட்ட பாறை.

இந்தஸ்தலம் பிரக்யாதிபெற்றதற்கு ஏற்பட்டுள்ள காரணங்களில் விஷ்ணுபக்தரான பூதத்தாழ்வார் ஜனித்த ஜனனபூமியிதென்பது ஒன்றெனக்கூறுவார்கள்.

இங்குள்ள பாக்கி ரதங்களிற் சிலபாண்டவாள் பெயர்கொண்டு ஏற்பட்டிருக்கக் காணலாம்.

அர்ச்சுனரதம் 100அடி நீளமும் 50அடி உயரமும் வாய்ந்துள்ளது. இங்கு அர்ச்சுனன் ஒற்றைக்காலில்நின்றுகொண்டு பாசுபதாஸ்திரம் பெறத் தபசுசெய்வதும் பரமசிவன் அவனது தவத்தினுல் மஹிழ்ச்சியடைந்து அவனுக்குக்கொடுக்க மேற்கூறிய அஸ்திரம் வைத்துக்கொண்டிருப்பதும் காட்டப்பட்டிருக்கிறது.

இன்னெருஇடத்தில் மஹாபலிசக்கிரவர்த்தியின் ஸதஸ்ஸு கூடியிருத்தல் காட்டப்பட்டுளது. இந்தசபை வாமனவதாரமெடுத்து மூன்றடி பூமி யாசித்து மண்ணுலகையும் விண்ணுலகையும் ஈரடிகளாக அளந்துகொண்டு மூன்ரும்அடியை பலிசக்கிரவர்த்தியின் தலைமீதுவைத்துப் பாதாளவுலகிற்கு அவனை அனுப்ப, அவன் அதற்காசனுகி, வீரர்களையும், ராஜாக்களையும், காட்டுமிருகங்களிற் சிலவற்றையும் ஸபைகூட்டிவைத்திருப்பது காட்டப்பட்டிருக்கிறது. இதேபாறையில் ஓர் விதானத்தின்கீழ் வாஸுகியென்ற பாம்பு காட்டப்பட்டிருக்கிறது.

கிருஷ்ணரதத்தில் ஸ்ரீகிருஷ்ணபகவான் இடதுகையால் மலையைத் தாங்கிக்கொண்டு இந்திரனது செயலால் ஏற்பட்ட பெரிய மழையினுல் கெடுதிவாரது பசுக்களைக்காப்



மஹாபலிபுரத்தில் அர்ஜுனன் தபஸ் செதுக்கப்பட்ட இன்னொரு பாறை.

பதும், அவருக்கருகில் பசுக்கள் ஆதரித்துப் பால்கறக்கப்படுவதும், ஒருஎருது பயத்துடன் நிற்பதும், காட்டப்பட்டிருக்கின்றன.

ஊருக்குத்தெற்கில் பஞ்சபாண்டவாள் ரதமென்ற ஐந்து ரதங்களிருக்கின்றன. வடகோடியிலுள்ளது துரௌபதி ரதமெனக்கூறப்படும். இங்கு காட்டப்பட்ட துரௌபதியின் சிலையுருவம் லக்ஷ்மியினது உருவம்போலிருக்கிறது. தவிர மேற்கிலுள்ள யானை, சிங்கம், நந்தி இவைகளின் உருவஅமைப்பும் பார்க்கவருகிறவர்களுக்கு வியப்பை விளைவிக்குமாறு ஏற்பட்டிருக்கக்காணலாம்.

பீமனது ரதத்தைச்சுற்றிக் கற்கால் மண்டபம் அமைக்கப்பட்டிருத்தலும் காணப்படும். தவிர பலிச்சக்ரவர்த்தியின் மகன் பாணாசுரன் ஆயிரம் கைகளுடன் கூடிய பெரிய அசுரனாகக் காட்டப்பட்டிருக்கின்றான்.

கிருஷ்ணபகவான் குமாரன் அநிருத்தன் பாணாசுரனது மகள்மீது மோகங்கொண்டதனால் அவ்வசுரனால் சிறையாக்கப்பட்டான். தனதுமகனது உதவிக்குச் சென்ற கிருஷ்ணபகவானுக்கும், தனது பக்தனது உதவிக்காகவந்த சிவனுக்கும் சண்டைநேர இறுதியில் பாணாசுரன் தோற்கடிக்கப்பட்டு இரண்டுகைகள் தவிர பாக்கிகைகளை இழந்து சாகுமளவும் கிருஷ்ணனுக்கு கீழ்ப்படிந்திருந்ததாகக் கூறியுள்ள ஓர் புராணக்கதையும் உளது.

இந்த ஸ்தலத்தைக்குறித்து புராணக்கதை பின்வருமாறு. இது பிரம்மாண்டபுராணத்தில் எட்டு அத்தியாயமுள்ளது.



மஹாபலிபுரத்தில் கோவர்த்தனோத்தாரம் செதுக்கப்பட்ட பாறை.

முன்னொருகாலத்தில் புண்டரீகன் என்று பெயருள்ள தர்மிஷ்டனானவும் ஈசுவரபக்தியுள்ளவனுமான பிராமணன் ஒருவனிருந்தான். அவன் இப்புண்ய பூமியிலுள்ள பற்பல க்ஷேத்ரங்களுக்குச் சென்று அங்கங்குள்ள ஈசுவரனை புஷ்பாதிகளால் அர்ச்சித்துப் பூஜித்து வந்தான். இவ்விதம் க்ஷேத்ராடனம் செய்து வரும் நாளில் திருவிடவேந்தியென்னுமிடத்திற்கு வந்து அங்கு லக்ஷ்மீதேவியை இடது மடியில் வைத்துக்கொண்டு வாராஹரூபந்தரித்துக்கொண்டிருக்கும் மஹாவிஷ்ணுவை தர்சித்துப் பூஜைசெய்துவிட்டு அங்கிருந்து புறப்பட்டு அடர்ந்தகாடுகள் வழியே செல்லும்பொழுது நல்ல சகுனங்களாவதைக்கண்டு தனக்கு நல்ல காலம் கிட்டியதென்று ஸந்தோஷித்தான். சற்றுதூரம் சென்றதும் மிகவும் அழகிய ஒருதடாகத்தையும் அது முழுமையும் மிகப்பெரிதானவையும் அதிகவாஸனையுள்ளவையுமான தாமரைப்புஷ்பங்கள் அடர்ந்து மலர்ந்திருப்பதைக்கண்டு வியந்து மிக்க சந்தோஷத்துடன் அப்புஷ்பங்களை ஒன்றுவிடாமல் கொணர்ந்து ஈசுவரனுக்கு அர்ச்சித்துப் பூஜை செய்து தன்யனாகவேண்டுமென்று கருதி அக்குளத்திலிறங்கி புஷ்பங்களை யெல்லாம் பறிக்க ஆரம்பித்தான். ஸாக்ஷாத் பகவானும் இவனுடைய பக்தியிலீடுபட்டு அசரீரவாணியாக இவனை அப்புஷ்பங்களைப்பறித்து க்ஷீராப்திக்குக்கொண்டு வந்து அங்கு சேஷசாயியான ஸ்ரீமந்நாராயணனுக்கு அர்ச்சிக்கும்படி ஆக்ஞாபித்தார். இக்குரலைக்கேட்ட புண்டரீகரிஷியும் அதிகஸந்தோஷமடைந்து மிக உத்ஸாகத்துடன் ஒரு புஷ்பம் விடாமல் பறித்து வந்தார். அச்சமயத்தில் அக்குளத்தில் அவருக்குஸமீபத்தில் ஒரு பெரியமுதலையா



மஹாபலிபுரம் மலையிலிருக்கும் குகை.

னது நாக்கில் காயம்பட்டு மூர்ச்சைபோய்க்கிடந்ததைக்கண்டார். அதைக்கண்டு மிகவும் அநுதாபப்பட்டு கருணையுடன் அதைநோக்கினார். அக்கருணாகடாக்ஷத்தாலேயே அம்முதலை ஆசுவாஸமடைந்து மூர்ச்சைதெளிந்து அவரை நமஸ்கரித்து பின்வருமாறு அவரை நோக்கிக்கூறிற்று—"எனக்கு மோக்ஷத்தையளித்த ஓ ரிஷியே, நான் ஒரு சாபவசத்தால் இம்முதலை ஜன்மத்தையடைந்தேன். இப்போழுது தங்களுடைய கருணாகடாக்ஷத்தால் எனக்கு அந்தசாபம் நீங்கிற்று. நான் இதற்குமுன்மல்லவரம் மஹாராஜாவாகவிருந்து நீதி நெறிதவறாமல் ராஜ்யபாரம் செய்து வந்தேன்—இப்பொழுதும் என்பிள்ளை தான் அங்கே ராஜ்யபாரம் செய்துகொண்டு அங்குள்ள வராஹப்பெருமாளைப்பூஜை செய்து வருகிறான். அந்தமல்லபுரமானது இங்கிருந்து ஒருகுரோசம் தெற்கேயிருக்கிறது. அது இந்திரனுடைய ஸ்வர்க்கலோகத்துக்குச்சமானமாயுள்ளது. இரண்டுயோஜனை நீளமும் அரையோஜனை அகலமுமுள்ளது. அங்குள்ளவர்களெல்லாம் மஹா தர்மிஷ்டர்களான ஸ்ரீவைஷ்ணவர்கள். அந்த மல்லவரத்துக்கு ஹரிப்பிரியன் என்கிற நான் அரசனாகவிருந்தேன். இப்பொழுது என்குமாரன் ஸதாநந்தனென்பவன் அதற்கு அரசனாகவிருக்கிறான். அங்குள்ள பூவராஹப்பெருமாளுடைய விருத்தாந்தத்தைச்சொல்லுகிறேன். என்னுடைய முன்னோர்கள் வம்சத்தில் ஹரிசேகரசக்ரவர்த்தியென்று ஒருவர் அரசனாகவிருந்தார். அவரும் அவருடையதாயாரும் சிறந்தவிஷ்ணுபக்தர்களாதலால் பிரதிதினமும் தவறாமல் ஒருயோஜனை தூரத்திலுள்ள திருவடவேந்திக்ஷேத்திரத்திற்குச்சென்று அங்குள்ள பூவராஹப்பெருமாளை ஸேவித்துவிட்டுத்திரும்பி தனது ஊர் வந்துசேர்ந்து அங்கு 4000 பிராமணர்களையுபசரித்து போஜனம் செய்விப்பது அவர்களுக்கு வழக்கமாயிருந்தது. இவரது பக்தியையும் சிரத்தையையும் கண்டு வராஹப்பெருமாள் மனமகிழ்ந்து தனதுபக்தனாகிய இவரைபி



மஹாபலிபுரம் பஞ்சபாண்டவர் ரதங்கள்.

ரதிதினமும் நல்ல வெய்யலில் திருவிடவேந்திக்கு நடக்கவைப்பது ஸரியல்லவென்று கருதி மிகக்கருணையுடன் தான் ஒரு கிழட்டு ஸ்ரீவைஷ்ணவப்பிராமணன் உருவெடுத்துக்கொண்டு தனது பத்னியாகிய லக்ஷ்மீதேவியை ஒருசிறுபெண்ணாகச்செய்து தனது கையில் அவளைப் பிடித்துக்கொண்டு தடியூன்றியவண்ணம் தள்ளாடிநடந்துகொண்டு ஹரிசேகரமஹாராஜா வின் அரண்மனைக்கு வந்துசேர்ந்தார். மஹாராஜாவும் அவருடையதாயாரும் இந்தக்கிழட்டு பிராமணனைக்கண்டு மிகஸந்தோஷத்துடன் அவரை வரவேற்று உபசரித்துவிட்டு தாங் கள் வழக்கம்போல் திருவிடவேந்திக்குப்போகப் புறப்பட்டார்கள்.

அச்சமயம் கிழட்டுவேஷம் தரித்திருந்த ஈசுவரனானவர் அவ்வரசனை நோக்கித் தான் அதிக விருத்தாப்பிய தசையிலிருப்பதால் வெகுதூரம் நடந்துவந்ததால் களைத்து மிகப்பசியால் வருந்துவதாகவும் தன்னுடன் வந்திருக்கும் சிறுபெண்ணும் வழிநடக்க முடியாமல் பசியால் மூர்ச்சித்ததாயும் தங்களுக்கு ஏதாவது ஆகாரம் கொடுத்துவிட்டு அப்புறம் தான் வேறுகார்யம் பார்க்கவேணுமென்றும் சொன்னார். அரசன்தான் நியம மாய் பிரதிதினமும் பூவராஹப்பெருமாளை தர்சனம் செய்துவந்தபிறகு தான் பிராமண ஸந்தர்ப்பணம் செய்துவைப்பது வழக்கமென்றும் அவ்விரதத்துக்கு பங்கமில்லாமல் அன்றும் போய்வர அனுமதி கொடுக்கவேண்டுமென்று என்னசொல்லியும் அக்கிழவர் கேட்கவில்லை. தங்களிருவருக்கும் அன்னமளிக்காமல் சென்றால் அரசன் திரும்பிவருவ தற்குள் தங்கள் பிராணன் போய்விடுமென்றார்கள். உடனே அவ்வரசன் தர்மஸங்கடத் திலகப்பட்டவனாய் மனதால் பூவராஹப்பெருமாளை தியானித்துக்கொண்டு அவ்விருவர்களை யும் அரண்மனைக்குள்ளழைத்துச்சென்று ரத்னங்களிழைத்த ஆஸனங்களில் உட்காரவைத்து தங்கப்பாத்திரங்களில் அவர்களுக்கு பற்பலவிதமான உணவுகளையளித்தான். அவர்கள் சாப்பிட உட்கார்ந்ததும் அரசனானவன் தன் கண்களை மூடிக்கொண்டு பூவராஹப்பெரு மாளையே தியானித்துக்கொண்டு அவர்களை நமஸ்கரித்து எழுந்து அஞ்சலிபத்தனாய்க் கண்களை விழித்தான். உடனே அக்கிழவரும் அச்சிறுபெண்ணும் உட்கார்ந்திருந்த விடத்தில் தனது ஸ்வாமியாகிய பூவராஹப்பெருமாளும் அவரது தேவியாரும் இருக்கக் கண்டான். உடனே ஆநந்தபரவசனாகி திரும்பத்திரும்ப ஈசுவரனை நமஸ்கரித்து மஹா யோகிகளுக்குக்கூட கிட்டாத பாக்யம் தனக்கு ஈசுவரானுக்ரஹத்தால் கிடைத்ததைக்

குறித்து ஸந்தோஷஸாகரத்தில் மூழ்கினவனாய் மெய்மறந்து நின்றான். இவ்வாறு ஸ்வாமியும் அம்பாளும் கிழவாகவும் சிறுபெண்ணாகவும் ரூபமெடுத்துக்கொண்டு அரண்மனையில் சாப்பிட உட்கார்ந்த அதேதருணத்தில் வெளியில் ஸந்தர்ப்பணைக்காகக் கூடியிருந்த ஆயிரக்கணக்கான பிராமணர்களுக்கெல்லாம் விருந்துசாப்பாடு சாப்பிட்டமாதிரியான திருப்தி உண்டாய்விட்டது. ஒன்றும் சாப்பிடாமலிருந்தபோதிலும் வயறுநிரம்ப சாப்பிட்டமாதிரியான உணர்ச்சி யேற்பட்டுவிட்டது. இதைக்கண்டு ஆச்சர்யப்பட்டு அவர்கள் அரசனிடம் தெரிவிப்பதற்காக அரண்மனை சென்றார்கள். அங்கு அரண்மனைக்குள் சென்றதும் தர்பார்மண்டபத்திலுள்ள ஸிம்ஹாஸனத்தில் ஸாக்ஷாத் பூவராஹப்பெருமாளும் லக்ஷ்மீதேவியும் வீற்றிருக்கக்கண்டார்கள். உடனே அதிகஸந்தோஷத்துடன் வேதங்களால் ஈசுவரனைஸ்தோத்திரம்செய்து நமஸ்கரித்து எப்பொழுதும் அவ்வாறே அவ்விடத்திலிருந்து தங்களுக்கு தர்சனம்கொடுத்து தங்களை கிருதார்த்தர்களாகச் செய்ய வேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். ஈசுவரனும் அதற்கிணங்கி பிர்ம்மாவால் செய்யப் படப்போகும் அசுவமேதயாகத்தின்பொழுது தனக்கும் தன்தேவிக்கும் ஒருரதம் அங்கிருந்து சுமார் ஐந்துயோஜனை தூரமுள்ள ஹஸ்திகிரிக்கு வருமென்றும் அதற்காகத்தான் மேற்குநோக்கி உட்காருவதாகவும் சொல்லி அவ்வாறே அமர்ந்திருந்தார். இதுதான் மல்லவரத்தில் பூவராஹஸ்வாமி வந்ததற்குக்காரணம்.

இந்த ஹரிசேகரமகாராஜாவுக்குப்பிறகு அவனுடைய ஸந்ததியார்கள் அநேகர்கள் ராஜ்யபாரம்செய்தார்கள். பிறகு என்தகப்பனார் ஹரிநந்தன மஹாராஜாவானவர் வெருகாலம்அரசாண்டார். அவருக்குப்பிறகு நான் நீதிநெறிதவராமல் அரசாண்ட நாளில் ஒருஸமயம் விஷ்ணுபக்தனாகிய ஒருபிராமணன் தனக்கு தினம் ஆகாரம்கொடுக்கவேணுமாய் யாசித்தான். நான் கர்வத்தால் அதை கவனியாமல் உதாஸீனம்செய்துவிட்டேன். அந்த பிராமணன் முதலையாகப்போகும்படி என்னை சபித்துவிட்டான். உடனே நானும் என்னுடைய ஸ்ரீ வைஷ்ணவப் பிரஜைகளும் அவனை நமஸ்கரித்து சாபவிமோசனத்திற்குக் காலம் குறிப்பிடச்சொல்லி பிரார்த்தித்தோம். மிகச்சிறந்த விஷ்ணுபக்தன் ஒருவன் ஒருஸமயம் உன்னை கருணையுடன் கடாக்ஷிப்பான். அப்பொழுதுஉனக்கு மோக்ஷம்உண்டாகும் என்று அவன் சொன்னான். அச்சமயம் இப்பொழுது எனக்குக் கிட்டிவிட்டது. என்றுசொல்லி அந்தமுதலை புண்டரீக ரிஷியை நமஸ்கரித்துவிட்டு முதலைஜன்மத்தை விட்டு நீங்கி மோக்ஷத்தையடைந்தது.

அந்த புண்டரீகரிஷியும் அக்குளத்திலுள்ள தாமரைப்புஷ்பங்களையெல்லாம் ஒன்று விடாமல் கொணர்ந்து சிலவற்றை மாலையாகக்கட்டி எல்லாவற்றையும் குடலையில் போட்டு தனது தலையில் தூக்கிக்கொண்டு ஆகாயவாணி சொன்னபடி க்ஷீரஸமுத்திரத்தைநோக்கிச் செல்லப் புறப்பட்டார். சிறிதுதூரம் கிழக்கே சென்றதும் அங்கு தென்பட்ட லவணஸமுத்திரத்தைக்கண்டு இதை யெவ்விதம் கடந்து க்ஷீரஸமுத்திரத்திற்குச் செல்வதென்று மயங்கி ஒன்றும் தோன்றாதவராய் நின்றார். பிறகு ஆகாசவாக்கை நினைத்து வேறுவழி யில்லாதவராய்; அப் புஷ்பக்கூடையை ஒருபுறமாக வைத்துவிட்டு அச்சமுத்திரக்கரையில் உட்கார்ந்து அங்கு ஜலம் மீளவும் ஸமுத்திரத்திற் சேராவண்ணம் மணலால் ஒரு அணைபோட்

டுத் தனது இருகரங்களாலும் ஸமுத்திரஜலத்தை யள்ளியள்ளி அவ்வணைக்கப்பால் வீசியெறிந்தார். இவ்வாறு ஒருவருஷகாலம் ஓயாமல்செய்தும்ஜலம் கொஞ்சமேனும் குறையாமலிருந்ததைக்கண்டு ஏக்கத்துடன் இதற்குள்ளாக தான் கொணர்ந்துவந்த புஷ்பங்கள் வாடிவிட்டனவோ வென்று அச்சங்கொண்டு அவைகளைப்போய்ப்பார்த்தார். அவைகள் வாடாமல் அப்பொழுதுதான் பறித்தவைபோல் காணப்பட்டனவாதலால் ஈசுவர அனுக்ரஹம் தனக்கு இருப்பதாக உத்ஸாகத்துடன் மறுபடியும் ஸமுத்திரஜலத்தை முன்போலவே கைகளால் இறைக்க வாரம்பித்தார். இவரது பக்தியின் உறுதியைக்கண்டு மகிழ்ந்து பகவான் அவரை அனுக்ரஹிக்கவேண்டி க்ஷீரஸமுத்திரத்திலிருந்து ஒரு கிழவுருக்கொண்டு அந்த ரிஷி யிருந்தவிடம் வந்துசேர்ந்தார். அந்த ரிஷியும் தான்செய்துகொண்டிருந்த வேலையால் சிரமமடைந்து நிமிர்ந்து பார்த்தஸமயத்தில் ஒரு கிழவர் தன்னைக்கண்டு மந்தஹாஸம் செய்துகொண்டு நிற்பதைப்பார்த்து அவர் தன்வேலையைப்பார்த்துத் தன்னைப் பரிஹாஸம் செய்வதாகக்கருதினார். ஆனால் அக்கிழப்பிராமணரோவெனில் தடியை யூன்றிக்கொண்டே அவருக்கு ஸமீபத்தில் நெருங்கி மிகப் பிரியத்துடன் அவருடைய யோகக்ஷேமத்தை விசாரித்தார். அவர் பதிலொன்றும் சொல்லாமலிருந்ததும் எதற்காக அவ்வளவு வியஸனத்துடனிருப்பதென்றுகேட்டார். பக்கத்திலிருந்த தாமரைப் புஷ்பக் கூடையையும் பார்த்து எதற்காக அப்புஷ்பங்கள் அங்கு கொண்டுவரப்பட்டனவென்றும் கேட்டார். அதற்கு அந்த ரிஷியானவர் எதற்காக அவர் இந்தகேள்வியெல்லாம் கேட்கவேண்டுமென்றும் அவர் மிகவும் தள்ளாமையான கிழவராதலால் அவரால் தனக்கு ஒருவித ஒத்தாசையும் செய்யமுடியாதென்றும் அவர் பேசாமல் வந்தவழியைப்பார்த்துக்கொண்டு போகலாமென்றும் சொன்னார். அவ்வார்த்தையைக்கேளாமல் அக்கிழவரும் அவரை மிகவும் வற்புறுத்தவே புண்டரீகரிஷியும் அவரை நிமிர்ந்துபார்த்து வணங்கி தனது வரலாறு முழுமையையும் அவரிடம் தெரிவித்து தான் க்ஷீராப்திநாதனையடைந்து அவரை அந்தத்தாமரை மலர்களால் பூஜிப்பதற்காகக் கடலை வற்றடிப்பதாகச் சொன்னார். இதைக்கேட்டதும் பகவானானவர் அவருடைய பக்தியைசோதிக்கவேண்டி அவரைக்கண்டு சிரித்து இதென்ன பைத்தியக்காரயோசனை, ஈசுவரன் எங்கேபார்த்தாலும் இருக்கவில்லையா, ஸமுத்திரத்தை யெங்கேயாவது வற்றடிக்கமுடியுமா, நிஷ்பிரயோஜனமான இந்தக்கார்யத்தில் யத்னப்பட்டு உயிரிழப்பதைக்காட்டிலும் வேறு நல்லக்ஷேத்ரங்களிலுள்ள பகவானை அத்தாமரைப் புஷ்பங்களாலர்ச்சித்தாலும் பலனுண்டு. புஷ்பங்களும் வாடிப்போகாமல் பிரயோஜனப்படும் என்றார். உடனே அந்த ரிஷியானவர் அக்கிழவரால் தன் உறுதியை ஒருநாளும் மாற்றமுடியாதென்றும் அப்புஷ்பங்கள் வாடாதவரையில் தன்னுயிர் நிற்குமென்றும், க்ஷீராப்திநாதனை அப்புஷ்பங்களால் பூஜைசெய்யாமல் தான் ஜீவிக்கமுடியாதென்றும் சொல்லி மீளவும் தன்கார்யத்தைக் கவனிக்கவாரம்பித்தார். இவ்வார்த்தைகளைக்கேட்ட பகவானானவர் மிகவும் ஸந்தோஷமடைந்து அவருக்கு அநுக்ரஹம் செய்யக்கருதி அவரைநோக்கி "நீசெய்யும் கார்யத்தை நான்செய்கிறேன். நீ எங்கேயாவது சென்று எனக்குக்கொஞ்சம் ஆஹாரம் கொண்டுவா. நான் கிழவனாதலாலும் வெகுதூரம் நடந்துவந்தேனாதலாலும் மிகப்பசியால் வருந்துகிறேன்" என்று சொல்லித் தனது மேல்வேஷ்டியை இடுப்பில்கட்டி ஸமுத்திரத்திலிறங்கி தனது இருகரங்களாலும்

ஜலத்தையெடுத்து எறிந்தார். அந்தக்ஷணத்திலேயே ஸமுத்திர ஜலம் அதிகமாகவற்றி ஒரு குரோசதூரத்துக்கப்பால் நகர்ந்துவிட்டது. இதைக்கண்ட புண்டரீகரிஷி மிகவாச்சர்யமடைந்து ஓடோடியும் பக்கத்திலுள்ள மல்லபுரம்சென்று அங்கு ஒரு நல்லபிராமணர் வீட்டிலிருந்து மதுரமான ஆஹாரங்களை யெடுத்துக்கொண்டு அக்கிழவருக்குக்கொடுப்பதற்காகத்திரும்பி அதிவேகமாக வந்தார். இங்கு வந்துபார்த்தால் ஸமுத்திரம் வெகுதூரம் போயிருக்கிறது. கிழவரைக்காணோம். அவருக்குப்பதிலாக கரையில் மணல்மேட்டில் ஸாக்ஷாத் மஹாவிஷ்ணு சயனித்துக்கொண்டிருக்கிறார். உடனே புண்டரீகரிஷியும் தான் கொண்டுவந்த ஆஹாரத்தையெல்லாம் கீழேவைத்துவிட்டு பகவானை நமஸ்கரித்து ஸ்தோத்திரம்செய்து தாமரை புஷ்பமாலையை அவருக்கு சாத்தி உதிரிபுஷ்பங்களால் அர்ச்சித்துப் பூஜித்து அந்த ஆஹாரங்களை நிவேதனம்செய்து ஆநந்தபாவசராய் நின்றார். பகவானும் அவருக்கு வேண்டிய வரனைக்கேட்கும்படி சொல்ல அந்த ரிஷியானவர் பகவான் எப்பொழுதும் அந்த விடத்திலேயே இருந்துகொண்டு தனக்கு தர்சனம் கொடுத்தமாதிரி எல்லோருக்கும் தர்சனம்கொடுத்து எல்லாப்பிராணிகளையும் கடைத்தேற்ற வேண்டுமென்று பிரார்த்தித்தார். பகவானும் அப்படியே ஆகட்டுமென்று அருளிச்செய்தார். உடனே லக்ஷ்மீதேவியும் மற்றுமுள்ள எல்லாதேவர்களும் அவ்விடத்திற்கு வந்துசேர்ந்தார்கள். அங்கு பகவான் மணல்மேட்டில் படுத்துக்கொண்டிருந்ததால் அவருக்கு ஸ்தல சயனப்பெருமாள் என்று பெயரிட்டு எல்லோரும் ஸ்தோத்தரித்தார்கள். இந்தச் செய்திகளையெல்லாம் கேள்விப்பட்ட மல்லபுரத்து அரசனான ஸதானந்தனன் தனது பரிவாரங்களுடன் அவ்விடம் வந்து பகவானை ஸேவித்து புண்டரீகரிஷியையும் வணங்கினான். அந்தரிஷியும் அவ்வரசனுக்குத் தான் குளத்தில் தாமரை புஷ்பம் பறித்தபொழுது அவ்வரசனின் தகப்பனான ஹரிப்பிரியன் முதலைரூபமாக வந்ததையும் அவருக்கும் தனக்கும் நடந்த ஸம்பாஷணைகளையும் கடைசியில் அவர் முக்தியடைந்ததையும் ஸவிஸ்தாரமாகச்சொன்னார். இதைக்கேட்ட அவ்வரசனும் ஜனங்களும் மிகவும் திருப்தியடைந்து அக்குளத்துக்கு புண்டரீகதீர்த்தமென்று பெயரிட்டு அவரை வணங்கினார்கள். பகவானும் அப்புண்டரீகதீர்த்தத்தில் ஸ்நானம்செய்து ஸமீபத்திலுள்ள தன்னை பூஜிப்பவர்களுக்கு மோக்ஷமளிப்பதாய்ச்சொல்லி அங்கு வந்திருந்தவர்களையெல்லாம் அநுக்ரஹித்தார்.

---

## சிலாசாஸனம்.

அடியில் விவரிக்கப்பட்டதும் "தென் இந்தியன் சாஸனங்கள்" என்று வெளியிடப்பட்ட முதல் புஸ்தகத்தில் 64, 65 பக்கங்களிலுமுள்ள இராஜராஜ சோழமஹாராஜன் 25-ம் ஆக்ஷியில் ஏற்பட்ட சாஸனத்திலிருந்து இவ்விடத்திலுள்ள சிவன் கோயிலுக்கு ஜலசயனம் என்றுபெயர் ஏற்பட்டிருந்ததுமன்னியில் மாமல்லபுரம் அந்தக்காலத்தில் ஆமூர் கோட்டத்தை சேர்ந்த ஆமூர் நாட்டிலிருந்ததும் தெரியவருகிறது; இந்த ராஜா ஜயித்த நாடுகளின் விவரமும் இதில் தெரியவருகிறது.

"ஸ்வஸ்தி ஸ்ரீ திருமகள் போலப் பெருநிலம் செல்வியுந்தனக்கேயுரிமை பூண்டமை மனக்கொளக் காந்தளூர்ச்சாலை கலமறுத்தருளி வேங்கைநாடுங் கங்கபாடியு நுளம்பபாடி

யுங்கடிகைபாடியுங் குடமலை ஞாடுங் கொல்லமுங் கலிங்கமும் எண்டிசை புகழ்தர ஈழ மண்டலமும் இரட்டபாடி ஏழரையிலக்கமுந்திண்டிறல் வென்றித் தண்டாற்கொண்ட தன் னெழில் வளரூழியுளெல்லா யாண்டு ந்தொழுதக விளங்கும் யாண்டே செழியரை தேசு கொள் ஸ்ரீ கோ ராஜராஜ ராஜகேஸரிவர்மரான ஸ்ரீ ராஜராஜதேவற்கு யாண்டு இருபத் தைஞ்சாவது ஆமூர்க்கோட்டம் வகைசெய்கின்ற புதுக்குடையான் ஏகதீரன் ஐயம்பதின் மன்நகர மாமல்லபுரத்து ஜலஶயனதேவர் தெற்கில் திருநந்தாவனத்தே இருக்க இன் நகரத்து நகரத்தோமும் பெரிளமை யொமும் எம்மிலிசைந்து செய்த வ்யவஸ்தையாவது எம்மூர் நீர்நிலமும் வெண்ணிலமும் தோட்டநிலமும் கொல்லைநிலமும் இறைநிலமாமச் செப்பெறப்பட்டதும் நூறுமனைக்கீழ் நால் கூறாக அடைப்பதாகவும் இப்பரிசு அடைச்சு நாலு கூறிட்ட ஒருகூறு இந்நகரத்து கடம்பிடுகுசெரிச் சங்கரப்பாடியார்க்கு இருபத் தைஞ்சு மனைக்கு கூறுவதாகவும் நின்ற மூன்றுகூறும் எழுபத்தைஞ்சு மனைக்கீழ் கூறுவ தாகவும் கூறிட்ட பரிசெ மனையும் நிலமும் விற்கவும் ஒற்றிவைக்கவும் ஸ்த்ரீதானஞ் செய்ய பெறுவதாகவும் நிலமும் மனையும் கூறடைத்த பரிசெ ப்ரக்ஷணஞ்செய்து குடுப்பதா கவும் முன்புள்ள ப்ரக்ஷணஞ்சாங்கம் கிழிவதாகவும் கூறடைத்த நிலங்களில் நின்ற பல்லு ருவில் பழமரங்கள் அவ்வவ கூறுடையானே பெறுவானாகவும் மஞ்சிக்கத்தில் நின்றன நூறுமனைக்குங் கூறுவதாகவும் நிலமின்றியே பதினறு வயஸின்மேல் வியாபாரஞ்செய்தி ருப்பாரை அரைக்கழஞ்சு பொன்னும் கூலிக்குச் செய்திருப்பாரை அரைக்கால் பொன் னும் ஏருடையராய் வரிசைக்கு முவாரைக்கால்ப் பொன்னும் ஆண்டுவரைக்கொள்வதா கவும் இப்பரிசு அன்றென்றுரைமேல் வேறு இருபத்தைங்கழஞ்சு பொன் தண்டங் கொள் வதாகவும் இப்பரிசு எம்மிலிசைந்து வ்யவஸ்தை செய்தோம் நகரத்தோமும் பேரிளமை யோமும் இப்பரிசு நகரத்தாரும் பேரிளமை யாருஞ்சொல்ல எழுதினேன் இன்னகரத்து கரணத்தான் திருவடிகள் மணிகண்டனுன் திருவெளரை முவாயிரத்து எழுநூற்றுவ னேன் இவை என்னெழுத்து".

இவ்விடத்தில் மூன்று கோயில்கள் இராஜ ராஜதேவர் 26வது ஆக்ஷியில் இருந்த தாக அடியில் கண்ட சாஸனத்தால் தெரியவரும;—(இது தென்இந்தியன் சாஸனங்கள் 1வது புத்தகம் 67, 68 பக்கங்களிலுள்ளது).

"ஸ்வஸ்திஸ்ரீ திருமகள்போலப் பெருநிலச்செல்வியும் தனக்கே உரிமை பூண்டமை மனக்கொளக்காந்தளூர்ச்சாலை கலமறுத்தருளி வேங்கை ஞாடுங் கங்கபாடியும் நுளம்ப பாடியுந்தடிகைபாடியுங் குடமலை ஞாடுங் கொல்லமுங் கலிங்கமும் எண்டிகை புகழ்தர ஈழமண்டலமும் இரட்டபாடி ஏழரை இலக்கமுந்திண்டிறல் வென்றித்தாண்டாற்க்கொண்ட தன் னெழில் வளரூழியுள்ளெல்லா யாண்டு ந்தொழுதக விளங்கும் யாண்டேசெழியரை தெசுகொள் ஸ்ரீகொராஜராஜராஜகெஸரிவர்மரான ஸ்ரீராஜராஜராஜ தெவற்கு யாண்டு இருபத்தாறுவது ஆமூர்க்கோட்டத்தாமூர் நாட்டு நகர மாமல்லபுரத்து நகரத் தோமும் பேரிளமையொமும் இந்நகரத்து ஜலஶயநத்து க்ஷத்ரியஸிம்ஹபல்லவஈஸ்வரத்து தெவரும் இராஜஸிம்ஹபல்லவஈஸ்வரத்து தெவரும் பள்ளிகொண்டருளிய தெவரும் உடைய பட்டாரத்து பொன்னில் இத்தளிகளில் பதிபந்தஆயத்தப...ட்டைசு தெவகன்

மிகள் ப...நாங்கள் கொண்டு கடவபொன் பத்தொன்பதின் கழைஞ்சு இத்தேவர்களுக் குத்தி—...னமாக உடையார் ஸ்ரீர......வர் திருநாமத்தில் ஸ்ரீ......தேவன் என்று இக் கொட்டம் வகைசெய்கின்ற புதுக்குடையான் ஏகதீரன் ஐம்பதின்......ஹவானஞ் செய் விக......நிலத்துக்கு கிழ்பாற்கெல்லை ஸஉ ஊ ரீகரை வழி பாவி.........யில் மெட்டுக்கும் ......ன்பாற்கெல்லை இத......பொகு பெருவழிக் [கு].........ல்பாற்கெல்லை.........ம்குரங் கன்.........க்கு கிழக்கு......இன்நகர.........ள்ளத்து............ளத்து......த்துக்கும... ......லையு.........நாலாயி.........சுகுழியி..........பொன்..........எரியும்............அகப் பட்ட.........வதீமாக.........கவும் இப.......... கழைஞ்சு.........லம்விற்று............ மமுச்செ...............பெரி...............ல்ல...............த்த...............கற.........மு ................வித்த.................ம்வித...............ற்றுக...............யெ..............’

### பூதத்தாழ்வார் சரித்திரம்

பூதத்தாழ்வார் தொண்டைநாட்டில் கீழ்சமுத்திரக்கரையிலுள்ள கடல்மல்லை என்னும் மஹாபலிபுரத்தில் ஐப்பசிமாத அவிட்டநக்ஷத்திரத்தில் அயோநிஜராய் ஒரு குருக்கத்தி மலரில் அவதரித்தார். இவர் மஹாவிஷ்ணுவை பலவாறாக ஸ்தோத்திரம் செய்திருக்கிறார்.

---

## ஆழ்வாராதிகள் பாடிய பாடல்கள்.

---

பூதத்தாழ்வார்பாடியது:—இரண்டாந் திருவந்தாதி

தமருள்ளம் தஞ்சை தலையரங்கம் தண்கால்
தமருள்ளும் தண்பொருப்புவேலை தமருள்ளும்
மாமல்லை கோவல் மதிட்குடந்தை யென்பரே
ஏவல்ல எந்தைக்குடம். 70

---

திருமங்கை ஆழ்வார் பாடியது:—

### பெரியதிருமொழி.—2-ம்பத்து.—5-ம்திருமொழி.

பாராயதுஉண்டுமிழ்ந்த பவளத்தூணைப் படுகடலிலமுதத்தைப் பரிவாய்கீண்ட
சீரானை எம்மானைத் தொண்டர்தங்கள் சிந்தையுள்ளேமுளைத்தெழுந்த தீங்கரும்பினை
போரானைக் கொம்பொசித்த போரேற்றினைப் புணர்மருத மிறநடந்த பொற்குன்றினை
காரானை யிடர்கடிந்த கற்பகத்தைக் கண்டதுநான் கடல்மல்லைத் தலசயனத்தே. 1

பூண்டவத்தம் பிறர்க்கடைந்து தொண்டுபட்டுப் பொய்ந்நூலை மெய்ந்நூலென்றென்றுமோதி
மாண்டு அவத்தம்போகாதேவம்மினெந்தை என்வணங்கப்படுவானை கணங்களேத்தும்
நீண்டவத்தைக்கருமுகிலை எம்மான் தன்னை நின்றவூர் நித்திலத்தை, தொத்தார்சோலை
காண்டவத்தைக் கனலெரிவாய்ப் பெய்வித்தானைக் கண்டதுநான் கடல்மல்லைத் தலசயனத்தே.2

உடம்புருவில் மூன்றொன்றாய் மூர்த்திவேறா யுலகுய்யநின்றானை அன்றுபேய்ச்சி
விடம்பருகு வித்தகனைக்கன்று மேய்த்து விளையாடவல்லானை, வரைமீகானில்
தடம்பருகு கருமுகிலைத் தஞ்சைக்கோயில் தவநெறிக்கோர் பெருநெறியை, வையம்காக்கும்
கடும்பரிமேல் கற்கியைநான் கண்டுகொண்டேன் கடிபொழில்சூழ் கடல்மல்லைத் தலசயனத்தே 3

பேய்த்தாயை முலையுண்டபிள்ளை தன்னைப் பிணைமருப்பிற் கருங்களிற்றை, பிணைமான்நோக்கின்
ஆய்த்தாயர் தயிர்வெண்ணெ யமர்ந்தகோவை அந்தணர்தமமுதத்தை, குரவைமுன்னே
கோத்தானை குடமாடு கூத்தன் தன்னைக் கோகுலங்கள் தளராமல் குன்றமேந்திக்
காத்தானை எம்மானைக் கண்டுகொண்டேன் கடிபொழில்சூழ் கடல்மல்லைத் தலசயனத்தே. 4

பாய்ந்தானைத் திரிசகடம் பாறிவீழப் பாலகனாயாலிலையிற் பள்ளியின்ப
மேய்ந்தானை இலங்கொளிசேர் மணிக்குன்றன்ன ஈரிரண்டுமால் வரைத்தோளெம்மான் தன்னை
தோய்ந்தானை நிலமகள்தோள் தூதிற்சென்றப் பொய்யறைவாய்ப் புகப்பெய்தமல்லர் மங்கக்
காய்ந்தானை எம்மானைக்கண்டுகொண்டேன் கடிபொழில்சூழ் கடல்மல்லைத் தலசயனத்தே. 5

கிடந்தானைத் தடங்கடலுள் பணங்கள்மேவிக் கிளர்பொறிய மறிதிரியஅதனின்பின்னே
படர்ந்தானை படுமதத்தகளிற்றின் கொம்புபறித்தானைப் பாரிடத்தை எயிறுகீற
இடந்தானை வளைமருப்பினேனமாகி, இருநிலனும் பெருவிசும்பு மெய்தாவண்ணம்
கடந்தானை எம்மானைக் கண்டுகொண்டேன் கடிபொழில்சூழ் கடல்மல்லைத் தலசயனத்தே. 6

பேணாதவலியரக்கர் மெலியஅன்று பெருவரைத்தோளிற நெரித்து, அன்றவுணர்கோனை
பூணாகம் பிளவெடுத்த போர்வல்லோனைப் பொருகடலுள் துயிலமர்ந்த புள்ளூர்தியை
ஊணாகப்பேய் முலைநஞ்சுஉண்டான்தன்னை உள்ளுவாருள்ளத்தே யுறைகின்றானை
காணாது திரிதருவேன் கண்டுகொண்டேன் கடிபொழில்சூழ் கடல்மல்லைத் தலசயனத்தே. 7

பெண்ணாகி இன்னமுதம் வஞ்சித்தானைப் பிறையெயிற்றன்றடலரியாய்ப் பெருகினானை
தண்ணார்ந்த வார்புனல்சூழ் மெய்யமென்னும் தடவரைமேல்கிடந்தானை, பணங்கள்மேவி
எண்ணானை எண்ணிறந்த புகழினானையிலங்கொளிசேரரவிந்தம்போன்று நீண்ட
கண்ணானை கண்ணாரக்கண்டுகொண்டேன் கடிபொழில்சூழ் கடல்மல்லைத் தலசயனத்தே. 8

தொண்டாயார் தாம்பரவுமடியினானைப் படிகடந்த தாளாளற்காளாயுய்தல்
விண்டானை தென்னிலங்கை யரக்கர் வேந்தைவிலங்குண்ண வலங்கை வாய்ச்சரங்களாண்டு
பண்டாய வேதங்கள்நான்கும் ஐந்துவேள்விகளுங் கேள்வியோடங்கமாறும்
கண்டானை தொண்டனேன் கண்டுகொண்டேன் கடிபொழில்சூழ் கடல்மல்லைத் தலசயனத்தே 9

படநாகத்தணைக்கிடந்தன் றவுணர்கோனைப்படவெகுண்டு மருதிடைபோய், பழனவேலி
தடமார்ந்த கடல்மல்லைத் தலசயனத்துத் தாமரைக்கண் துயிலமர்ந்த தலைவன்தன்னை
கடமாருங் கருங்களிறுவல்லான் வெல்போர்க்கலிகன்றி யொலிசெய்தவின்பப்பாடல்
திடமாக இவையைந்துமைந்தும்வல்லார் தீவினையை முதலரியவல்லார் தாமே. 10

## பெரியதிருமொழி.—2-ம்பத்து.—6-ம்திருமொழி

நண்ணாத வாளவுணரிடைப்புக்கு வானவரைப்
பெண்ணாகி அமுதூட்டும் பெருமானார் மருவினிய
தண்ணார்ந்தகடல்மல்லைத் தலசயனத் துறைவாரை
எண்ணாதேயிருப்பாரை இறைப்பொழுது மெண்ணோமே. 1

பார்வண்ணமடமங்கை பனிநன்மாமலர்க்கிழத்தி
நீர்வண்ணன்மார்வத்தி லிருக்கையை முன்நினைந்து, அவனூர்
கார்வண்ணமுதுமுந்நீர்க் கடல்மல்லைத் தலசயனம்
ஆரெண்ணும் நெஞ்சுடையார் அவரெம்மை ஆள்வாரே. 2

ஏனத்தினுருவாகி நிலமங்கையெழில்கொண்டான்
வானத்திலவர் முறையால் மகிழ்ந்தேத்தி வலங்கொள்ள
கானத்தின் கடல்மல்லைத் தலசயனத்துறைகின்ற
ஞானத்தினொளியுருவை நினைவாரென் நாயகரே. 3

விண்டாரை வென்று ஆவிவிலங்குண்ண மெல்லியலார்
கொண்டாடுமல்லகலமழலேர வெஞ்சமத்துக்
கண்டாரை கடல்மல்லைத் தலசயனத்துஉறைவாரை
கொண்டாடும் நெஞ்சுடையா ரவரெங்கள் குலதெய்வமே. 4

பிச்சச் சிறுபீலிச் சமண்குண்டர் முதலாயோர்
விச்சைக்கிறையென்னு மவ்விறையைப் பணியாதே
கச்சிக்கிடந்தவனூர் கடல்மல்லைத் தலசயனம்
நச்சித்தொழுவாரை நச்சுஎன்தன் நல்நெஞ்சே! 5

புலங்கொள் நிதிக் குவையோடு புழைக்கைம்மாகளிற்றினமும்
நலங்கொள் நவமணிக்குவையும் சுமந்தெங்கும் நான்றொசிந்து
கலங்களியங்கும்மல்லைக் கடல்மல்லைத் தலசயனம்
வலங்கொள் மனத்தாரவரை வலங்கொள்ளென் மடநெஞ்சே! 6

பஞ்சிச்சிறுகூழை யுருவாகி மருவாத
வஞ்சப்பெண் நஞ்சுண்டஅண்ணல், முன் நண்ணாத
கஞ்சைக் கடந்தவனூர் கடல்மல்லைத் தலசயனம்
நெஞ்சில் தொழுவாரைத் தொழுவாயென் தூய்நெஞ்சே! 7

செழுநீர் மலர்க்கமலம் திரையுந்துவன்பகட்டால்
உழுநீர் வயலுழவருழப் பின்முன் பிழைத்தெழுந்த
கழுநீர் கடிகமழும் கடல்மல்லைத் தலசயனம்
தொழுநீர் மனத்தவரைத் தொழுவாயென் தூய்நெஞ்சே! 8

பிணங்களிடு காடதனுள் நடமாடு பிஞ்ஞகனோடு
இணங்கு திருச்சக்கரத்தெம் பெருமானார்க்கு இடம் விசும்பில்
கணங்களியங்கும்மல்லைக் கடல்மல்லைத் தலசயனம்
வணங்கும் மனத்தா ரவரை வணங்குஎன்தன் மடநெஞ்சே! 9

கடிகமழும் நெடுமறுகில் கடல்மல்லைத் தலசயனத்து
அடிகளடியேநினையு மடியவர்கள் தம்அடியான்
வடிகொள்நெடு வேல்வலவன் கலிகன்றி யொலிவல்லார்
முடிகொள்நெடு மன்னவர்தம் முதல்வர்முதலாவாரே! 10

## பெரிய திருமொழி.—3-ம் பத்து.—5-ம் திருமொழி.

சங்குதங்கு தடங்கடல் கடல்மல்லையுள்கிடந்தாய்! அருள்புரிந்து
இங்கென்னுள் புகுந்தா யினிப்போயினாலறையோ!

கொங்கு செண்பகமல்லிகை மலர்புல்கி இன்னிள வண்டுபோய் இளந்
தெங்கின் தாதளையும் திருவாலியம்மானே! 8

பெரிய திருமொழி.—7-ம் பத்து.—1-ம் திருமொழி.

புள்வாய் பிளந்த புனிதாவென்றழைக்க
உள்ளேநின் றென்னுள்ளங் குளிருமொருவா!
கள்வா! கடல்மல்லைக் கிடந்தகரும்பே!
வள்ளாலுன்னை எங்ஙனம் நான்மறக்கேனே! 4

திருக்குறுந்தாண்டகம்.

பிண்டியார் மண்டையேந்திப் பிறர்மனை திரிதந்துண்ணும்
முண்டியான் சாபம்தீர்த்த வொருவனூர் உலகமேத்தும்
கண்டியூராங்கம் மெய்யம் கச்சிபேர் மல்லையென்று
மண்டினார் உய்யலல்லால் மற்றையார்க்குய்யலாமே? 19

திருநெடுந்தாண்டகம்.

வங்கத்தால் மாமணிவந்துந்து முந்நீர்
மல்லையாய்! மதிள்கச்சி யூராய்! பேராய்!
கொங்கத்தார் வளங்கொன்றை யலங்கல் மார்வன்
குலவரையன் மடப்பாவைஇடப்பால்கொண்டான்
பங்கத்தாய்! பாற்கடலாய்! பாரின் மேலாய்!
பனிவரையினுச்சியாய்! பவளவண்ணா!
எங்குற்றாய்? எம்பெருமானுன்னைநாடி
ஏழையேனிங்ஙனமே யுழிதருகேனே. 9

சிறிய திருமடல்.

காரார்குடந்தை கடிகை கடல்மல்லை
ஏரார் பொழில் சூழிடவெந்தை நீர்மலை 73

பெரிய திருமடல்

மன்னும் கடல்மல்லை மாயவனை வானவர்தம்
சென்னி மணிச்சுடரைத் தண்கால் திறல்வலியை 120

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| விக்டோரியா மெய்கீர்த்தி ... | 0 | 12 | 0 |
| மாணிக்கவாசகர் ... | 0 | 10 | 0 |
| கமலபவனம் ... | 0 | 10 | 0 |
| காதலா கருணையா ... | 0 | 14 | 0 |
| பாதாளவாஸி ... | 0 | 6 | 0 |
| சந்திரகுப்தன் ... | 0 | 8 | 0 |
| மங்கம்மாள் ... | 1 | 8 | 0 |
| ஞானசுந்தரன் ... | 0 | 12 | 0 |
| கமலநாதன் ... | 1 | 8 | 0 |
| அமிர்த ஸஞ்சீவினி ... | 1 | 2 | 0 |
| மதுராம்பாள் ... | 0 | 12 | 0 |
| வஜ்ரலேகை ... | 1 | 4 | 0 |
| தயாபரஸுந்தரி ... | 0 | 12 | 0 |
| மீனலோசனி ... | 0 | 6 | 0 |
| தீனதயாளு ... | 0 | 12 | 0 |
| பாய்பரமானந்தன் ... | 1 | 0 | 0 |
| ஸோமசுந்தரன் ... | 1 | 0 | 0 |
| யமகாதகன் ... | 0 | 8 | 0 |
| அமரநாதன் ... | 1 | 4 | 0 |
| குணஸுந்தரன் ... | 1 | 4 | 0 |
| கோமளம் குமரியானது ... | 0 | 12 | 0 |
| குலசேகரன் ... | 1 | 0 | 0 |
| நாகபூஷணம் ... | 0 | 12 | 0 |
| பீமராவ் ... | 0 | 10 | 0 |
| விஷதாரி ... | 1 | 4 | 0 |
| தாரா ... | 0 | 10 | 0 |
| பாத்திரமறிந்து பிச்சையெடு ... | 0 | 1 | 0 |
| ராஜராஜேச்வரி ... | 1 | 8 | 0 |
| கல்பலதா ... | 1 | 4 | 0 |
| கோமளா ... | 0 | 12 | 0 |
| சித்ரரேகை ... | 1 | 8 | 0 |
| மாயாவதி ... | 0 | 8 | 0 |
| விக்ரமோர்வசீயம் ... | 0 | 8 | 0 |
| ராஜபுத்ர வீரன் ... | 0 | 8 | 0 |
| அழகு சுந்தரி ... | 0 | 8 | 0 |
| உத்தரராமாயண கதைகள் ... | 0 | 4 | 0 |
| மரகதவல்லி ... | 0 | 6 | 0 |
| சத்ருஜித் ... | 0 | 12 | 0 |
| ஆஸ்திகோபாக்யானம் ... | 0 | 5 | 0 |
| சிறுத்தொண்டர் ... | 0 | 8 | 0 |
| ஸ்ரீமதி ... | 0 | 2 | 0 |
| வீரவல்லி ... | 0 | 12 | 0 |
| பாயிரவிருத்தி ... | 1 | 0 | 0 |
| மனோன்மணி ... | 0 | 12 | 0 |
| மனோன்மணி கதை ... | 0 | 8 | 0 |

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| செல்வராஜன் ... | 0 | 12 | 0 |
| கமலசுந்தரி ... | 0 | 4 | 0 |
| சந்திரஹாஸன் ... | 0 | 3 | 0 |
| பவழக்கொடி ... | 0 | 8 | 0 |
| காயற்கண்ணி ... | 0 | 12 | 0 |
| ராஜாத்தி ... | 0 | 12 | 0 |
| சிறுமணிச்சுடர் ... | 0 | 1 | 0 |
| அர்ஜுன ஸந்யாஸி ... | 0 | 12 | 0 |
| கதாகதம்பம் ... | 0 | 2 | 0 |
| குசேல வெண்பா ... | 0 | 8 | 0 |
| பகீரதன் ... | 0 | 1 | 0 |
| பாலவிநோதினி ... | 0 | 2 | 0 |
| ஔவையார் ... | 0 | 12 | 0 |
| ஸாவித்திரி சரித்திரம் ... | 0 | 4 | 0 |
| ஜியார்ஜ்மன்னன் சரித்திரம் ... | 0 | 1 | 6 |
| வள்ளியம்மை சரித்திரம் ... | 0 | 8 | 0 |
| பாலகங்காதர திலகர் ... | 0 | 4 | 0 |
| திரிலோகமோஹனாங்கி ... | 1 | 0 | 0 |
| ஆர்ய சரித்திரம் ... | 0 | 8 | 0 |
| ராமனும் ஸீதையும் ... | 0 | 1 | 6 |
| ஜீவகன் ... | 1 | 0 | 0 |
| ஸுபோத பாரிஜாதம் ... | 5 | 0 | 0 |
| தனபாலன் ... | 2 | 0 | 0 |
| கற்பகசுந்தரி ... | 2 | 12 | 0 |
| சுந்தர்சிங் ... | 1 | 4 | 0 |
| ஆயிரம் தலைவாங்கிய அபூர்வசிந்தாமணி | 1 | 0 | 0 |
| பாலசுந்தரம் ... | 1 | 0 | 0 |
| அம்பலவாணன் ... | 1 | 4 | 0 |
| ருக்மணி ... | 1 | 0 | 0 |
| சரோஜனி ... | 2 | 0 | 0 |
| அஞ்சனாவதி ... | 1 | 4 | 0 |
| லலிதாதேவி ... | 0 | 12 | 0 |
| நீலோத்பலவிசாலாக்ஷி ... | 1 | 8 | 0 |
| ஜெயசாந்தகாந்தா ... | 1 | 0 | 0 |
| திருக்கழுக்குன்றத்துக்கொலை ... | 1 | 8 | 0 |
| கோஹினூர் ... | 0 | 9 | 0 |
| பவானந்தர் ... | 0 | 8 | 0 |
| ஞானானந்தன் ... | 0 | 11 | 0 |
| கோவிந்தன் ... | 0 | 10 | 0 |
| மதனசிங்கர் ... | 1 | 4 | 0 |
| மாணிக்கவல்லி ... | 1 | 0 | 0 |
| இரட்டைப்புலவர் சரிதம் ... | 0 | 6 | 0 |
| அண்டப்புளுகன் ... | 0 | 8 | 0 |
| மர்மமுகி ... | 0 | 12 | 0 |
| ரதிமதனன் ... | 0 | 12 | 0 |

ஆஸ்திகமனோஜ்ஜீவினி. காலடி அத்வைத ஸபையிலிருந்து சிருங்கேரி மடத்தாரால் வெளியிடப்படும் ஓர் மாதஸஞ்சிகை. பிரதி ஸஞ்சிகையிலும் ஸம்ஸ்கிருதம், தமிழ் இரண்டு பாஷைகளிலும் வியாஸங்கள் வெளிவரும்.

வருஷ சந்தா ரூ. 6 12 0
தனி ஸஞ்சிகை ரூ. 0 9 0

**மானேஜர்,**

**ஸ்ரீ வாணீ விலாஸ புத்தகசாலை,**

**ஸ்ரீரங்கம்.**



ஸ்ரீ வாணி விலாஸ் பிரஸ்,

ஸ்ரீரங்கம்.

